# தொழுகை விளக்கம்

## ஷாபி



பிரசுரிப்பவர் :

O M. பாஸி ஆலிம்
4-ம் குறிச்சி, சம்மாந்துறை. (கி. மா.)

V P P ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.


கொழும்பில் கிடைக்குமிடம்

பர்வின் டிரேடர்ஸ்
116/7, குமார வீதி, கொழும்பு - 11

MOULAVI O M FASSY ALIM DIVISION No 4 SAMMANTHURAI (E P)

# மக்காவிக் கஜுமாலை

[illegible]



[illegible]

786

# தொழுகை விளக்கம்

## ஷாபி

இப்ருஹிம் ஸ்டோர்ஸ்
உரிமை; A.M. இப்ருஹிம்
ஆண்டிசந்தி- J.வளக்
சம்மாந்துறை.

தொகுத்தவர்
**மௌலவி O. M. பாஹி ஆலிம்**
4ம் குறிச்சி
சம்மாந்துறை (E. P.)

தொழுகைகள் சம்மந்தமான விஷயங்கள் சுருக்கமாகவும் தெளிவாகவும் இதில் அடங்கியுள்ளன விரிவாகப் பார்ப்பதானல் தொழுகை விளக்கம் பெரிய புத்தகத்தை வாங்கிப் பார்க்கவும்.

# பொருளடக்கம் 1


| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1. | இஸ்லாம் | 1 |
| 2. | இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கைகள் | 1 |
| | அல் ஈமான் - நம்பிக்கை வைத்தல். | 2 |
| 3. | கலிமாக்கள் ஐந்து. | 2 |
| | முதலாம் கலிமா 'தையிபு' | 2 |
| 4. | இரண்டாம் கலிமா 'ஷஹாதத்து' | 3 |
| 5. | மூன்றும் கலிமா 'தம்ஜீத்' | 3 |
| 6. | நான்காம் கலிமா 'தௌஹீத்' | 4 |
| 7. | ஐந்தாம் கலிமா 'றத்துல் குப்ர்' | 5 |
| 8. | சுத்தம். | 6 |
| 9. | சுத்தத்தின் வகைகள். | 6 |
| 10. | தொடக்கு | 6 |
| 11. | குளிப்பு | 6 |
| 12. | முழுக்கின் ஷர்த்துக்கள் - 3 | 7 |
| 13. | முழுக்கின் பர்ளுகள் - 3 | 7 |
| 14. | முழுக்குவிதியானவர்கள் செய்யக்கூடாதவை-5 | 7 |
| 15. | முழுக்கின் சுன்னத்துக்கள் - 6 | 8 |
| 16. | அசுத்தம் (நஜீஸ்) | 8 |
| 17. | இலேசான அசுத்தம். | 8 |
| 18. | மன்னிக்கப்படாத அசுத்தம். | 9 |
| 19. | முதலாம் பிரிவு. | 9 |
| 20. | இரண்டாம் பிரிவு. | 9 |
| 21. | தண்ணீர். | 9 |
| | கூடுதலான தண்ணீர். | 9 |
| | குறைவான அளவு தண்ணீர். | 9 |
| 22. | வுழூவின் ஷர்த்துக்கள் - 6 | 10 |
| 23. | வுழூவின் பர்ளுகள் - 6 | 10 |
| 24. | வுழூவின் சுன்னத்துக்கள் - 14 | 11 |
| 25. | வுழூ செய்தபின் ஓதவேண்டிய துஆ | 11 |
| 26. | வுழூவை முறிக்கும் காரியங்கள் - 5 | 12 |
| 27. | வுழூ இல்லாதவர்கள் செய்யவிலக்கானவை -3 | 12 |
| 28. | பர்ளான தொழுகைக்குரிய நேரங்கள் | 13 |
| 29. | பாங்கு (அதான்) | 13 |
| | பாங்கு சொல்லும் முறை | 14 |
| 32. | பாங்கிற்கு பிரதி கூறல். | 15 |
| 33. | பாங்கு, இகாமத்தின் பின் ஓதும் துஆ | 17 |

| எண் | | பக்கம் |
|---|---|---|
| 34. | தயமம் செய்வதன் விபரம். | 18 |
| 35. | காயத்திற்குரிய பட்டி அல்லது பிளாஸ்டர். | 18 |
| 36 | தயம்மமின் ஷர்த்துக்கள் - 7 | 19 |
| 37. | தயம்மமின் பர்ளுகள் - 7 | 19 |
| 38. | தயம்மமின் சுன்னத்துக்கள் - 6 | 20 |
| 39. | தயமத்தை முறிக்கும் காரியங்கள் - 7 | 21 |
| 40. | பர்ளுத் தொழுகை விபரம். | 21 |
| 41. | சுன்னத். | 22 |
| 42. | சுன்னத் - முஅக்கதா | 22 |
| 43. | சுன்னத் உறுல் முஅக்கதா. | 22 |
| 44. | அதாஅன் - கழாஅன் | 23 |
| 45. | பர்ளுக்கு முன்னால் பர்ளுக்குப் பின்னால். | 23 |
| 46. | ஐங்காலத்தொழுகை (பர்ளு) களின் ரக்அத்துக்கள். | 24 |
| 47. | ராத்திபத்தான சுன்னத்தின் ரக்அத்துக்கள். | 24 |
| 48. | தொழுகையின் ஷர்த்துக்கள் - 10 | 24 |
| 49 | தொழுகையின் பர்ளுகள் - 19 | 25 |
| 50 | அப்ஆழு சுன்னத்துக்கள் - 12 | 26 |
| 51 | அலங்கார சுன்னத்துக்கள் - 17 | 27 |
| 52. | தொழுகையை முறிக்கும் காரியங்கள் - 9 | 30 |
| 53. | ஸஜ்தா ஸஹ்வு. | 31 |
| 54. | ஸஜ்தா ஸஹ்வு செய்யும் முறை. | 32 |
| 55. | தொழுகை. | 32 |
| 56. | தொழும் முறை | 33 |
| 57. | சூரத்துல் பாத்திஹா. | 34 |
| 58. | சூரத்துல் பலக். | 36 |
| 59. | சூரத்துன் நாஸ். | 37 |
| 60. | தொழுகைக்குப் பின். | 46 |
| 61. | ஐங்காலத்தொழுகையின் பொதுவான துஆ. | 47 |
| 62. | ஸுப்ஹு தொழுகையின் துஆ. | 48 |
| 63. | ழுஹர் தொழுகையின் துஆ. | 49 |
| 64. | அஸர் தொழுகையின் துஆ. | 50 |
| 65. | மஃரிப் தொழுகையின் துஆ. | 51 |
| 66. | இஷா தொழுகையின் துஆ. | 52 |
| 67. | ஸுப்ஹு தொழுகையில் குனூத் ஓதுதல். | 53 |

| | | |
|---|---|---|
| 68. | குனூத் ஓதுதல். | 54 |
| 69. | வித்ரு தொழுகை. | 55 |
| 70. | வித்ரு தொழுகையின் துஆ. | 56 |
| 71. | ஐங்காலத் தொழுகையின் நிய்யத்துக்கள். | 56 |
| 72. | ழுகருடைய பர்ளு. | 57 |
| 73. | ழுகருடைய பிந்திய ஸுன்னத். | 58 |
| 74. | அஸ்ருடைய பித்திய ஸுன்னத்து. | 58 |
| 75. | அஸ்ருடைய பர்ளு. | 59 |
| 76. | மஃரிபுடைய முந்திய ஸுன்னத்து. | 59 |
| 77. | மஃரிபுடைய பர்ளு. | 60 |
| 78. | மஃரிபுடைய பிந்திய ஸுன்னத்து. | 60 |
| 79 | இஷாவுடைய முந்திய ஷுன்னத்து. | 61 |
| 80. | இஷாவுடைய பர்ளு | 61 |
| 81 | இஷாவுடைய பிந்திய ஸுன்னத்து. | 62 |
| 82. | ஸுப்ஹுடைய ஸுன்னத்து | 62 |
| 83. | ஸுப்ஹுடைய பர்ளு. | 63 |
| 84. | வித்ருடைய இரண்டு ரக்அத்துக்கள். | 63 |
| 85. | வித்ருடைய ஒருரக்அத்து. | 63 |
| 86. | ஜும்ஆத் தொழுகை. | 64 |
| 87. | ஜும்ஆ நிறைவேறுவதற்குரிய நிபந்தனைகள் 6 | 64 |
| 88. | ஜும்ஆ தொழுகையின் முந்திய ஸுன்னத்து | 65 |
| 89. | ஜும்ஆ தொழுகையின் நிய்யத்து | 65 |
| 90 | ஜும்ஆவின் பிந்திய ஸுன்னத்து | 65 |
| 91. | தராவீஹ் தொழுகையின் நிய்யத்து. | 66 |
| 92. | ரமழான் முதல் பத்தில். | 66 |
| 93. | ரமழான் நடுப்பத்தில். | 67 |
| 94. | ரமழான் கடைசிப் பத்தில். | 67 |
| 95. | நோன்பின் நிய்யத்து | 68 |
| 96. | நோன்பு திறக்கும் போது. | 68 |
| 97. | தஸ்பீஹ் தொழுகை. | 68 |
| 98. | தஸ்பீஹ் தொழும் முறை. | 69 |
| 99. | தஸ்பீஹ் தொழுகையின் நிய்யத்து | 70 |
| 100. | நோன்புப் பெருநாள் தக்பீர். | 71 |
| 101. | ஹஜ்ஜுப் பெருநாள் தக்பீர் | 71 |
| 102. | தக்பீர் சொல்லும் முறை. | 71 |
| 103. | நோன்புப்பெருநாள் தொழுகையின் நிய்யத்து | 72 |
| 104. | ஹஜ்ஜுப் பெருநாள் நிய்யத்து. | 72 |

இப்ருகிம் [illegible]
உரிமை: A.M. [illegible]
786

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருநாமத்தால் ஆரம்பிக்கிறேன்.

# 1. இஸ்லாம்

இஸ்லாம் என்றால் சாந்தி, சமாதானம் என்பது பொருளாகும். இம்மையிலும், மறுமையிலும் சாந்தியாக வாழ வழிவகுக்கும் மார்க்கமே இஸ்லாம். எனவே அல்லாஹ்வின் ஏவலை எடுத்து நடப்பதும், அவனது விலக்கல்களைவிட்டும் தவிர்ந்து கொள்வதும் எமக்குக் கட்டாயமாகிறது.

## 2. இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கைகள் 5

إِسْلَامُ مَا رُكْمُ

بُنِيَ الْإِسْلَامُ عَلَى خَمْسٍ شَهَادَةُ أَنْ لَا إِلٰهَ
إِلَّا اللّٰهُ وَأَنَّ مُحَمَّدًا رَّسُوْلُ اللّٰهِ وَإِقَامُ الصَّلٰوةِ
وَإِيْتَاءُ الزَّكٰوةِ وَصَوْمُ رَمَضَانَ وَحَجُّ الْبَيْتِ
مَنِ اسْتَطَاعَ إِلَيْهِ سَبِيْلًا.

இஸ்லாம் மார்க்கம் ஐந்து காரியங்களால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அவையாவன:-

1. வணக்கத்துக்குரிய நாயன் அல்லாஹுத்த ஆலாவைத் தவிர வேறு யாருமில்லை; முகம்மது (ஸல்) அவர்கள் அவனது திருத்தூதர் என்று சாட்சி கூறுதல்.

2. தினமும் ஐந்து நேரம், விடாமல் அல்லாஹ்வைத் தொழுதல்.

3. செல்வம் படைத்தவர்கள் ஏழைகளுக்கு ஏழை வரி செலுத்துதல்.

4. றமழான் மாதம் நோன்பு வைத்தல்.

5. பொருள் வசதியும் பிரயாண வசதியும், உடல் வலிமையும் உள்ளவர்கள் புனித மக்காவிற்குச் சென்று ஹஜ்ஜு என்னும் வணக்கம் புரிதல்.

## அல்ஈமான் நம்பிக்கை வைத்தல்

اٰمَنْتُ بِاللّٰهِ وَمَلَائِكَتِهٖ وَكُتُبِهٖ وَرُسُلِهٖ
وَالْيَوْمِ الْاٰخِرِ وَالْقَدْرِ خَيْرِهٖ وَشَرِّهٖ مِنَ اللّٰهِ تَعَالٰى

"ஆமன்து பில்லாஹி, வமலாயிகதிஹி வகுதுபிஹி, வறுஸுலிஹி வல்யவ்மில் ஆகிரி வல்கத்ரி கய்ரிஹி வஷர்ரிஹி மினல்லாஹி தஆலா."

இதன் பொருள்: அல்லாஹு த் தஆலா ஒருவன் என்றும், அவனது மலக்குகளைக் கொண்டும், அவனது வேதங்களைக் கொண்டும் அவனது றசூல்மார்களைக்கொண்டும், மறுமைநாளைக்கொண்டும், நன்மையும் தீமையும், அவனது கற்பனைப் படி நடைபெறுகின்றன என்றும் நம்பி உறுதிகொள்கிறேன் என்பதாகும்.

## 3. கலிமாக்கள் ஐந்து

### முதலாம் கலிமா "தைய்யிபு"

اَوَّلْ كَلِمَةْ طَيِّبْ
لَا اِلٰهَ اِلَّا اللّٰهُ مُحَمَّدٌ رَّسُوْلُ اللّٰهِ

லாஇலாஹ இல்லல்லாஹு முகம்மதுர் ரசூலுல்லாஹி;

இதன்பொருள்:- வணக்கத்துக்குரிய நாயன் அல்லாஹுத்த ஆலாவைத் தவிர வேறு யாருமில்லை. முகம்மது (ஸல்) அவர்கள் அல்லாஹுத் த ஆலாவுடைய திருத்தூதர் ஆவார்கள்.

4. இரண்டாம் கலிமா ''ஷஹாதத்து''

رُبْنَا مُكَلِمَةُ شَهَادَةً

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ
وَ اَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ

அஷ்ஹது அன்லாஇலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு வலாஷரீக லஹுவ அஷ்ஹது அன்ன முகம்மதன் அப்துஹு வறசூலுஹு.''

இதன் பொருள்:- உண்மையாக வணக்கத்துக்குரிய நாயன் அல்லாஹுத் தஆலாவைத் தவிர வேறு யாருமில்லை என்று நான் சாட்சி கூறுகிறேன். அவன் தனித்தவன். அவனுக்கு யாதொரு இணையுமில்லை. மேலும், உண்மையாக முகம்மது நபி (ஸல்) அவர்கள் அவனுடைய அடிமையும், தூதரும் ஆவார்கள் என்று நான் சாட்சி கூறுகின்றேன்.

5. மூன்றும் கலிமா '' தம்ஜீத் ''

مُوْنَا مُكَلِمَةُ تَمْجِيْدٍ

سُبْحَانَ اللّٰهِ وَالْحَمْدُ لِلّٰهِ وَلَا اِلٰهَ اِلَّا اللّٰهُ
وَاللّٰهُ اَكْبَرُ وَلَا حَوْلَ وَلَا قُوَّةَ اِلَّا بِاللّٰهِ
الْعَلِيِّ الْعَظِيْمِ.

ஸுப்ஹானல்லாஹி, வல்ஹம்துலில்லாஹி, வலாஇலாஹ

இல்லல்லாஹு. வல்லாஹு அக்பர், வலாஹவ்ல, வலாகுவ்வத இல்லா பில்லாஹில் அலியில் அழீம்.

இதன் பொருள்:- அல்லாஹுத்தஆலா தூயவன், மேலும் புகழ் யாவும் அல்லாஹ்வுக்கே உரித்தாகும். மேலும், வணக்கத்துக்குரிய நாயன் அல்லாஹுத் தஆலாவைத் தவிர வேறு யாருமில்லை. மேலும் அல்லாஹ் மஹா பெரியவன். மேலும் பாவத்தை விட்டும் விலகியிருக்கவும். நன்மையான காரியத்தைச் செய்யவும் அல்லாஹ்வின் உதவியின்றி எந்த மனிதனுக்கும் எவ்வித சக்தியும் அடியோடு கிடையவே கிடையாது

### 6. நாலாம் கலிமா ''தவ்ஹீத்''

نالام كلمة توحيد

لَا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ لَهُ الْمُلْكُ
وَلَهُ الْحَمْدُ يُحْيِيْ وَيُمِيْتُ بِيَدِهِ الْخَيْرُ وَهُوَ
عَلٰى كُلِّ شَيْءٍ قَدِيْرٌ.

லாயிலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீகலஹு லஹுல் முல்கு வலஹுல்ஹம்து யுஹியீ வயுமீது பியதிஹில் கைறு வஹுவ அலா குல்லி ஷைஇன் கதீர்

இதன் பொருள்:- வணக்கத்துக்குரிய நாயன் அல்லாஹுத் தஆலாவைத் தவிர வேறு எவருமில்லை. அவன் தனித்தவன். அவனுக்கு யாரொரு இணையுமில்லை. அரசுரிமை அவனுக்கே சொந்தம் புகழ்யாவும் அவனுக்கே உரித்து. இறந்தவர்களை உயிர்ப்பிப்பவனும் உயிருடனிருப்பவர்களை மரணிக்கச் செய்கிறவனும் அவனே, எல்லா நன்மைகளும் அவனது கைவசமே இருக்கின்றன. சகலவற்றின் மீதும் சக்தியுடையவன்.

## 7. ஐந்தாம் கலிமா "ரத்துல்குப்ர்"

اَيْنْتَامْ كَلِمَةُ رَدُّ الْكُفْرِ

اَللّٰهُمَّ اِنِّيْ اَعُوْذُ بِكَ مِنْ اَنْ اُشْرِكَ بِكَ شَيْئًا
وَاَنَا اَعْلَمُ وَاَسْتَغْفِرُكَ لِمَا لَا اَعْلَمُ اِنَّكَ اَنْتَ
عَلَّامُ الْغُيُوْبِ تُبْتُ عَنْهُ وَتَبَرَّأْتُ عَنْ كُلِّ
دِيْنٍ سِوٰى دِيْنِ الْاِسْلَامِ وَاَسْلَمْتُ وَاٰمَنْتُ وَ
اَقُوْلُ لَا اِلٰهَ اِلَّا اللّٰهُ مُحَمَّدٌ رَّسُوْلُ اللّٰهِ

அல்லாஹும்ம, இன்னீ, அஊதுபிக்க, மின்அன், உஷ்ரிக்க பிக ஷைஅன் வஅன, அஃலமு, வஅஸ்தஃபிறுக்க லிமாலா அஃலமு இன்னக்க அந்த அல்லாமுல் உயூப் துப்து அன்ஹு, வதபர்றஃது, அன்குல்லி தீனின் சிவாதீனில் இஸ்லாம் வஅஸ்லம்து, வஆமன்து, வஅகூலு லாஇலாஹ இல்லல்லாஹு முகம்மதுர்ரஸூலுல்லாஹ்.

இதன் பொருள்:- நாயனே நான் அறிந்தவனாக, உனக்கு எப்பொருளையும் இணையாக்குவதை விட்டும் உண்மையாக உன்னிடத்தில் பாதுகாப்பைத் தேடுகிறேன். மேலும் நான் அறியாமல் செய்த பாவத்திற்கு உன்னிடத்தில் பாவமன்னிப்பைத் தேடுகிறேன். நிச்சயமாக, நீ மறைவானவற்றை நன்கறிந்தவனாயிருக்கிறாய். எனவே. உனக்கு இணை கற்பித்தல் என்னும் 'ஷிர்க்கை' விட்டும் நான் தௌபாச் செய்து மீண்டேன். இஸ்லாம் மார்க்கத்தைத் தவிர, மற்ற எல்லா மார்க்கங்களை விட்டும் நான் நீங்கிவிட்டேன். மேலும், லாஇலாஹ இல்லல்லாஹு முகம்மதுர்ரசூலுல்லாஹி என்ற கலிமாவைச் சொல்லி நான் ஈமான் கொண்டு இஸ்லாமாகி விட்டேன்.

## 8 சுத்தம்

"சுத்தம் ஈமானில் பாதி" என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அறிவித்துள்ளார்கள். எனவே முஸ்லீம்களாகிய நாம் இஸ்லாத்தின் இரண்டாவது கடமையான ஐங்காலத் தொழுகையைத் தொழுது வருவது கட்டாய கடமையான படியால், அந்தத் தொழுகையைத் தொழுவதற்கு முன் சுத்தம் செய்து கொள்ளும் முறையை அறிந்திருப்பது அவசியமாகும்.

## 9. சுத்தத்தின் வகைகள்

(1) உடல் சுத்தம் (2) உடைச் சுத்தம் (3) இடம் சுத்தம் என சுத்தம் மூன்று வகைப்படும். இம் மூன்று வகைச் சுத்தமும் செய்து கொள்ளாவிடில், தொழுகையை நிறைவேற்ற முடியாது.

## 10. தொடக்கு

சிறு தொடக்கு, பெரும் தொடக்கு என இருவகைத் தொடக்குகளுள்ளன.

சிறு தொடக்கை நீக்குவதற்கு வுழு செய்து கொண்டால் போதுமாகும். ஆனால் பெரும் தொடக்கை நீக்குவதற்குக் குளித்து முழுக வேண்டும்.

## 11. குளிப்பு

முழுக்கை விதியாக்கும் காரியங்கள் ஆறு; அவையாவன

(1) ஆண் பெண் சேர்க்கை என்னும் சம்போகத்தினால் முழுக்கு கடமையாகும்.

(2) உடலுறவின் காரணத்தாலோ அல்லது வேறு எவ்வகையினாலோ, நித்திரையில் சொர்ப்பனம் காரணமாகவோ, இந்திரியம் வெளிப்படுதல்.

(3) மரணித்தல் அதாவது மரணமடைந்தவர்களைக் குளிப்பாட்டுவது.

மேற்கூறிய மூன்றும் ஆண், பெண் இருபாலாருக்கும் பொதுவானது. பெண்களுக்கு மட்டும் சொந்தமானது மூன்று அவை:-

(4) பிள்ளைப்பேறு – ஈரமின்றிப் பிரசவம் ஏற்பட்டாலும்

சரி.

(5) மாதாந்த ருது எனப்படும் மாதவிடாய் வந்து நின்று விடுதல். இதற்கு 'ஹைழு' என்று கூறப்படும்.

(6) பெண்கள் பிரசவத்திற்குப்பின் ஏற்படும் ''நிபாஸ்'' எனப்படும் பிள்ளைப்பேறு.

## 12. முழுக்கின் ஷர்த்துக்கள் 3

முழுக்கின் குளிப்புக்கு விதிகள் மூன்று அவையாவன:-

(1) பர்லுகளில் பரிமாறப்பட்டாத துப்பரவான தண்ணீரைத் தேடுதல்.

(2) முஸ்லிமாக இருத்தல்.

(3) தண்ணீரைச் செல்லவிடாது தடைசெய்யும் சுண்ணும்பு தார், சந்தனம், மீன், செதில் போன்ற வஸ்துக்கள் உடம்பில் ஒட்டியிருந்தால் அவற்றை நீக்கிக் கொள்ளுதல்.

## 13. முழுக்கின் பர்ளுகள் 3

முழுக்கின் குளிப்புக்கு பர்ளுகள் மூன்று அவையாவன:-

(1) உடம்பில் பட்டிருக்கும் நஜீசை நீக்குதல்.

(2) ''பெருந்தொடக்கை நான் நீக்குகிறேன்'' என்று மனதால் நினைத்துக் கொள்ளுதல்.

(3) அந்த நினைவோடு உடல் முழுவதும் தண்ணீரால் நனையும்படி குளித்துக் கொள்ளுதல்.

## 14. முழுக்கு விதியானவர் செய்யக் கூடாதவை 5

பின்வரும் காரியங்களில், முழுக்கு, விதியான்வர்கள் செய்யக் கூடாது அவையாவன:-

(1) தொழுதல் (2) குர் ஆனை ஓதுதல் (3) குர் ஆனைத் தொடுதல் (4) பள்ளிவாசலில் தரிபடுதல் (5) மக்காவிலுள்ள கஃபத்துல்லா எனும் புனித ஆலயத்தை (தவாபு செய்தல்) சுற்றிவலம் வருதல்.

இங்கு குறிப்பிட்டுள்ள விஷயங்கள் ஐந்தும் ஆண், பெண் இருபாலாருக்கும் பொதுவானவை. இவற்றை விட, பெண்

களுக்கு மட்டும் சொந்தமான காரியங்கள் மூன்று. அவை:-
(1) ஹைழு (மாதாந்த ருது), நிபாஸ் (பிள்ளைப்பேறு) காலத்தில் முழங்காலுக்கும் தொப்புளுக்குமிடையில் கையிணக்கம் செய்து சுகம் பாராட்டுதல் (2) சேர்க்கை செய்தல் (3) நோன்பு நோற்றல்.

குறிப்பு:- ஹைழு, நிபாஸ் காலத்தில் விடுபடும் தொழுகையைத் திரும்பவும் 'களா' செய்யத் தேவையில்லை. ஆனால் நோன்புகளைக் கணக்கு வைத்திருந்து 'களா' ச் செய்ய வேண்டும்.

### 15. முழுக்கின் சுன்னத்துக்கள் 6

(1) பிஸ்மில்லா சொல்லுதல் (2) இரண்டு முன்கைகளையும் கழுவுதல் (3) தொழுகைக்கு 'வுழு, செய்வது போல் வுழு செய்தல் (4) உச்சி முதல் உடல் முழுவதையும் நனையும்படி தண்ணீரை ஊற்றுதல் (5) இயன்றவரை இருகைகளாலும் உடம்பைத் தேய்த்தல் (6) வலது பக்கத்தை முதலில் கழுவுதல்.

## 16. அசுத்தம் (நஜீஸ்)

அசுத்தம் இரண்டு வகைப்படும். அவையாவன:-
(1) மன்னிக்கப்பட்ட அசுத்தம். (இலேசான அசுத்தம்)
(2) மன்னிக்கப்படாத அசுத்தம்.
மன்னிக்கப்படாத அசுத்தம் இரண்டு வகைப்படும். அவையாவன:-
(அ) இலேசான அசுத்தம். (ஆ) கடினமான அசுத்தம்.

### 17. இலேசான அசுத்தம்

அதாவது; புறு, குருவி போன்றவற்றின் எச்சம். பேன், மூட்டைப்பூச்சி, தெள்ளு, ஈ போன்றவற்றின் இரத்தம் ஆகியவை இலேசான அசுத்தமாக (நஜீசாக) கருதப்படும். இவற்றில் சிறிதளவேனும் தொழும் புடவை அல்லது உடல், தொழும் இடம் ஆகியவற்றில் பட்டுவிட்டால் மார்க்கத்தில் இவை மன்னிக்கப்படும்.

### 18. மன்னிக்கப்படாத அசுத்தம்

மன்னிக்கப்படாத அசுத்தம் இரு பிரிவுகளாக அமைந்திருக்கிறது என்பதை முன்னர் அறிந்தோம். அவற்றில்,

### 19. முதலாம் பிரிவு

அசுத்தத்திற்கு உதாரணமாக, பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம். அன்னியரின் அதிக இரத்தம், ஊனம், வாந்தி, உண்பதற்கு விலக்கப்பட்ட மிருகங்களின் பால், கள், சாராயம், முன்பின் துவாரங்களால் வெளியேறுபவைகள் (இந்திரியத்தைத் தவிர), இறந்த பிராணிகள், இவற்றின் பதனிடப்படாத தோல், மயிர், எலும்பு முதலியவை மன்னிக்கப்படாத அசுத்தமாகும். எனவே தண்ணீரினுல் கழுவுவதன் மூலம் இவற்றைச் சுத்தம் செய்தல் வேண்டும்.

### 20. இரண்டாம் பிரிவு

நாய், பன்றி ஆகியவற்றின் எச்சில், மயிர், தோல் வியர்வை ஆகியவை எல்லாம் கடினமான நஜீசாகும். இவை ஈரமாக இருக்கும் போது உடம்பில் பட்டாலும், இவற்றின்மீது விழும் தண்ணீர் எமக்குத் தெறித்தாலும், அசுத்தம் ஏற்பட்டுவிடும். எனவே அசுத்தமடைந்த இடத்தை ஏழுமுறை கழுவ வேண்டும். ஆனுல் நாய் நக்கிய பாத்திரங்களை ஆறுமுறை நன்ருகத் தண்ணீரால் கழுவி, ஏழாம்முறை சுத்தமான மண்ணைச் சேர்த்துக் கழுவினுல்தான் சுத்தமடையும்.

### 21. தண்ணீர்

கூடுதலான தண்ணீர் குறைவான அளவு தண்ணீர் என தண்ணீரை இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

#### 1. கூடுதலான தண்ணீர்

குல்லத்தைன் அளவும், அதற்குக் கூடுதலாகவும் உள்ள தண்ணீராகும்.

#### 2. குறைவான அளவு தண்ணீர்

குல்லத்தைன் அளவுக்குக்குறைவான அளவு தண்ணீராகும் குல்லத்தைன் என்றுல் ஏறக்குறைய இரண்டு அடி நீள, அகல

ஆளமுள்ள தொட்டியில் கொள்ளும் நீரின் அளவாகும் குல்லத்தைன் அல்லது அதற்கு மேற்பட்ட அளவு தண்ணீரில் நஜீஸ் விழுந்து விட்டால் நிறம், சுவை, மணம் ஆகியவற்றில் ஏதேனும் ஒரு தன்மையை அறிய முடியாத நிலையிருந்தால் அந்தத் தண்ணீர் அசுத்தமடையாது. ஆனல் நிறம், மணம், சுவை ஆகியவற்றில் ஏதாவது ஒரு தன்மை காணப்பட்டால் அத்தண்ணீர் நஜீஸாகிவிடும்.

தாய்ப்பாலை மட்டும் அருந்தும் ஆண் குழந்தையின் மூத்திரம் பட்டுவிட்டால் கழுவத்தேவையில்லை. அதன்மேல் நீரை ஓடவிட்டால் போதும் ஆனல் பெண் குழந்தையின் மூத்திரம் பட்டு விட்டால் கழுவியே சுத்தம் செய்ய வேண்டும். முழுக்கு விதியான ஒருவர் குல்லத்தைன் நீரில் விழுந்து முழுகிக் குளித்தாலும் அத்தண்ணீர் அசுத்தமடையாது.

## 22. வுழூவின் ஷர்த்துக்கள் 6

வுழூவின் ஷர்த்துக்கள் ஆறு. அவையாவன:-

(1) முஸ்லிமாகயிருத்தல் (2) பகுத்தறியும் புத்தியுள்ளவனுகயிருத்தல். (3) வுழூ பர்ளுஎன்று அறிதல். (4) வுழூவின் முறைகளை எல்லாம் அறிந்திருத்தல். (5) வுழூச்செய்வதற்கான துப்பரவான தண்ணீரைத் தேடுதல். (6) வுழூச் செய்யும் பர்ளான உறுப்புக்களில் தண்ணீர் படாமல் தடை செய்யக் கூடிய தார், சுண்ணும்பு, சந்தனம், மெழுகு, மீன் செதில், கடதாசித்தாள் போன்ற ஏதும் ஒட்டியிருந்தால் அவற்றை நீக்கிக்கொள்ளுதல்

## 23. வுழூவின் பர்ளுகள் 6

வுழூவின் பர்ளுகள் ஆறு. அவையாவன:-

1. வுழூவின் கடமைகளை நிறைவேற்றுகிறேன். என்று நிய்யத்துச் செய்தல்.
2. அந்த நிய்யத்துடன் முகத்தைக் கழுவுதல் (முகம் என்பது நீளத்தால் தலையில் உரோமம் முளைக்கும் இடத்தில் இருந்து நாடிக்குழியுட்படவுள்ள இடம் அகலத்தால் இரு செவிகளுக்கிடையிலுள்ள பாகம்)
3. இரு கைகளையும் (முழங்கையுட்பட) கழுவுதல்
4. தலையில் சில பகுதியை தண்ணீரால் தடவுதல்.

5 இருகால்களையும் கரண்டையுடபட கழுவுதல்

6 மேலே கூறப்பட்ட ஒழுங்கு தவருது ஒன்றன்பின் ஒன்ருகச் செய்தல் ○

## 24 வுழூவின் சுன்னத்துக்கள் 14

வுழூவின் சுன்னத்துக்கள் பதினுன்கு அவையாவன

1. கிப்லா பக்கம் முகம் நோக்குதல்
2 வுழூ செய்கிறேன் என்று நினைத்தல்
3. பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்றஹீம் என்று ஓதிக்கொள்ளல்
4. இரு கைகளையும் மணிக்கட்டுவரை கழுவுதல்.
5. பற்களை சுத்தம் செய்தல்.
6 வாய் கொப்பளித்தல்.
7. வாயுடன் நாசிக்கும் நீர் செலுத்துதல
8. முகம் கழுவும் போது தாடியைக் குடைந்து கழுவுதல்
9. வலது பாகத்தை முதலில் கழுவுதல்
10. தலை முழுவதையும் மஸ்ஹு செய்தல்.
11 இரு காதுகளையும் மஸ்ஹு செய்தல்
12. காலின் விரல்களை கோரிக் கழுவுதல்
13. ஒவ்வொரு உறுப்புக்களையும் மூன்று முறை கழுவுதல்.
14 கழுவிய உறுப்புக்கள் காய்வதற்கு முன் மறுஉறுப்புக்களைக் கழுவுதல்.

## 25. வுழூசெய்தபின் ஓதவேண்டிய "துஆ"

வுழூ செய்து முடிந்ததும் பின்வரும் துஆவை ஓதவேண்டும்.

اَللّٰهُمَّ اجْعَلْنِيْ مِنَ التَّوَّابِيْنَ وَاجْعَلْنِيْ مِنَ
الْمُتَطَهِّرِيْنَ وَاجْعَلْنِيْ مِنْ عِبَادِكَ الصَّالِحِيْنَ
سُبْحَانَكَ اللّٰهُمَّ وَبِحَمْدِكَ اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا
اَنْتَ اَسْتَغْفِرُكَ وَ اَتُوْبُ اِلَيْكَ وَصَلَّى اللّٰهُ عَلٰى
سَيِّدِنَا مُحَمَّدٍ وَّ اٰلِهٖ وَصَحْبِهٖ اَجْمَعِيْنَ وَالْحَمْدُ
لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ

"அல்லாஹும்மஜ் அல்னீ, மினத் தவ்வாபீன். வஜ்அல்னீ மினல் முத்ததஹ்ஹிரீன், வஜ்அல்னீ, மின் இபாதிகஸ் ஸாலிஹீன் சுப்ஹான கல்லாஹும்ம, வபிஹம்திக அஷ்ஹது அல்லாயிலாஹ இல்லா அன்த அஸ்தஃபிறுக வஅதூபு இலைக்க, வஸல்லல்லாஹு அலா செய்யிதினா முஹம்மதின் வஅலா ஆலிஹி, வஸஹ்பிஹி அஜ்மஈன். வல்ஹம்துலில்லாஹி, றப்பில் ஆலமீன்"

இதன் பொருள்:- பாவவிமோசனம் பெறவுள்ள தவ்பா செய்தவர்களில் ஒருவனாக என்னை ஆக்கியருள் நாயனே! பரிசுத்தமடைந்தவர்களில் ஒருவனாகவும் உனது நல்லடியார்களில் ஒரு வனாகவும் நீ, என்னை ஆக்கியருள் நாயனே! நீ தூயவன். உன்னை நான் புகழ்ந்து துதிக்கிறேன் உன்னையன்றி வணக்கத்துக்குரியவன் வேறுயாருமில்லை என நான் சாட்சிபகர்கின்றேன். உன்னிடத்தில் பாவமன்னிப்பையும். தவ்பா என்னும் விமோசனத்தையும் கோருகிறேன். மேலும் எங்கள்நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் மீதும். அன்னாரின் குடும்பத்தார் மீதும் தோழர்கள் மீதும் அல்லாஹுத் தஆலா ஸலவாத்தும் ஸலாமும் கூறுவானாக. புகழ்யாவும் உலகத்தாரைப் போஷிக்கும் அல்லாகுவிற்கே உரியதாகும்.

## 26. வுழூவை முறிக்கும் காரியங்கள் 5

வுழூவை முறிக்கும் காரியங்கள் ஐந்து அவையாவன:-

1. முன் துவாரத்தால் அல்லது பின் துவாரத்தால் இந்திரியம் நீங்கலாக மற்றேதேனும் வெளியாகுதல்.
2. பித்தட்டு பூமியில் நன்கு சரியாக அமையாமல், நித்திரை செய்தல்.
3. அபத்தில்; கையின் உட்புறம் படுதல்
4. சுயஉணர்வு இல்லாமல் போகுதல்.
5. தனக்கு விவாகம் செயயத் தகுமான மாதரைத் திரையின்றித் தொடுதல்.

## 27. வுழூ இல்லாதவர்கள் செய்ய விலக்கானவை 3

வுழூ இல்லாதவர்கள் செய்யத் தகாத காரியங்கள் மூன்று அவையாவன:-

1 தொழுதல் 2 குர்ஆனைத் தொடுதல்.

3. மக்காவிலுள்ள 'கஃபத்துல்லா' எனும் அல்லாஹ்வின் புனித ஆலயத்தை 'தவாபு' செய்தல் (வலம் வருதல்)

## 28 பர்ளான தொழுகைகளுக்குரிய நேரங்கள்

1. ழுகர் தொழுகையின் நேரம்:- சூரியன், உச்சியை விட்டும் விலகியதிலிருந்து, சூரிய வெளிச்சத்தில் ஒரு பொருளின் நிழல் அந்தப்பொருளின் அளவுடையதாக வரும் நேரம் வரை ழுகர் தொழலாம். ஆனுல் சூரியன் உச்சியிலிருக்கும்போது அந்தப்பொருளுக்கு நிழல் எந்த அளவு இருந்ததோ அந்த அளவையும் சேர்த்துக் கணக்கிடல் வேண்டும்.

2. அஸர் தொழுகையின் நேரம்:- ழுஹருடைய நேரம் முடிந்ததிலிருந்து சூரியன் அஸ்தமாகும் (மறையும்) வரையிலாகும்.

3. மஃரிபு தொழுகையின் நேரம்:- சூரியன் மறைந்ததிலிருந்து செம்மேகம் மறையும் வரையிலாகும்.

4. இஷா தொழுகையின் நேரம்:- செம்மேகம் மறைந்ததிலிருந்து கிழக்குத் திசையில் உண்மையான வெண்மை தோன்றும் வரையிலாகும்.

5 ஸுப்ஹு தொழுகையின் நேரம்:- கிழக்குத்திசையில் உண்மையான வெண்மை தோன்றியதிலிருந்து சூரியன் உதிக்கும் வரையிலாகும்.

## 29. பாங்கு (அதான்)

தொழுகை நேரங்கள் வந்ததும் ஜனங்களை தொழுகைக்காக அழைக்கும் அழைப்பை, அரபு மொழியில் 'அதான்' என்றும் பாரஸீக மொழியில் 'பாங்கு' என்றும் கூறப்படும். தமிழிலும் பாங்கு என்றே சொல்லப்படுகிறது.

தொழுகைக்கு முன்னுல் பாங்கும். இகாமத்தும் சொல்வது சுன்னத்து, பர்ளுத்தொழுகைக்கும், விடுபட்ட (கழா) தொழுகைக்கும் தனியாகவோ, கூட்டாகவோ தொழும் போது பாங்கும், இகாமத்தும் சொல்வது நன்று.

பாங்கு சொல்லும் முறை பின்வருமாறு:-

اَللّٰهُ اَكْبَرْ اَللّٰهُ اَكْبَرْ ـ اَللّٰهُ اَكْبَرْ اَللّٰهُ اَكْبَرْ
اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ ـ اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ
اَشْهَدُ اَنَّ مُحَمَّدًا رَّسُوْلُ اللّٰهِ ـ اَشْهَدُ اَنَّ مُحَمَّدًا رَّسُوْلُ اللّٰهِ
حَيَّ عَلَى الصَّلَاةْ ـــ حَيَّ عَلَى الصَّلَاةْ
حَيَّ عَلَى الْفَلَاحْ ـــ حَيَّ عَلَى الْفَلَاحْ
اَللّٰهُ اَكْبَرْ اَللّٰهُ اَكْبَرْ ـــ لَا اِلٰهَ اِلَّا اللّٰهُ

அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர்
அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர்
அஷ்ஹது அன்லா இலாஹ இல்லல்லாஹ்
அஷ்ஹது அன்லா இலாஹ இல்லல்லாஹ்
அஷ்ஹது அன்ன முஹம்மதர் ரஸூலுல்லாஹ்
அஷ்ஹது அன்ன முஹம்மதர் ரஸூலுல்லாஹ்
ஹய்ய அலஸ்ஸலாத், ஹய்ய அலஸ்ஸலாத்
ஹய்ய அலல் பலாஹ், ஹய்ய அலல் பலாஹ்
அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர்
லாஇலாஹ இல்லல்லாஹ்.

இதன் பொருள்:- அல்லாஹ் மஹா பெரியவன் அல்லாஹ் மஹா பெரியவன்

அல்லாஹ் மஹா பெரியவன் அல்லாஹ் மஹா பெரியவன்.

வணக்கத்துக்குரியவன் அல்லாஹ்வைத்தவிர வேறுயாருமில்லை என நான் சாட்சி கூறுகிறேன்.

வணக்கத்துக்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறுயாருமில்லை என நான் சாட்சி கூறுகிறேன்.

முகம்மது (ஸல்) அவர்கள் அல்லாஹவின் திருத்தூதர் என்று நான் சாட்சி கூறுகிறேன்

முகம்மது (ஸல்) அவர்கள் அல்லாஹவின் திருத்தூதர் என்று நான் சாட்சி கூறுகிறேன்

தொழுகைக்காக விரைந்து வாருங்கள். தொழுகைக்காக விரைந்து வாருங்கள். ஜெயம்பெற விரைந்து வாருங்கள். ஜெயம்பெற விரைந்து வாருங்கள். அல்லாஹ் மஹா பெரியவன். அல்லாஹ் மஹா பெரியவன். வணக்கத்துக்குரியவன் அல்லாஹ்வைத்தவிர வேறு யாருமில்லை. ஆனல் ஸுப்ஹுத் தொழுகைக்கான பாங்கில் மட்டும்.

حَيَّ عَلَى الْفَلَاحْ

"ஹய்ய அலல்பலாஹ்" என்று கூறியபின்

اَلصَّلٰوةُ خَيْرٌ مِّنَ النَّوْمِ

"அஸ்ஸலாத்து கைரும் மினன்னவ்ம்"

என்று இரு தடவைகள் கூறிக்கொள்ளல் வேண்டும்.

இதன் பொருள்:- தொழுகை தூக்கத்தைவிட மிகச்சிறந்தது

## 32. பாங்கிற்குப் பிரதி கூறல்

பாங்கு சத்தத்தைக் கேட்பவர்கள் பாங்கு சொல்பவர் (முஅத்தின்) கூறுவது போன்று தானும் கூறிக்கொள்ளல் வேண்டும் ஆனல்.

حَيَّ عَلَى الصَّلَاةْ

"ஹய்ய அலஸ்ஸலாத்"

حَيَّ عَلَى الْفَلَاحْ

"ஹய்ய அலல்பலாஹ்"

என்று முஅத்தின் கூறும சமயங்களில் பின்வருமாறு கூறவும்.

لَاحَوْلَ وَلَاقُوَّةَ اِلَّا بِاللهِ الْعَلِيِّ الْعَظِيْمِ

**லாஹவ்ல வலாகுவத்த இல்லாபில்லாஹில் அலிய்யில் அழீம்.**

**இதன் பொருள்:-** வல்லமை மிக்க உயர்வான அல்லாஹ் வின். உதவியின்றி வேறு யாருக்கும் நன்மை செய்யவும் தீங்கைச் செய்யாமல் விடவும் எவ்வித ஆற்றலுமில்லை அதாவது அல்லாஹ்வுக்கே சகல ஆற்றலும் உண்டு.

இனி முஅத்தின் ஸுப்ஹுக்குரிய பாங்கில்

اَلصَّلَاةُ خَيْرٌ مِّنَ النَّوْمِ

"அஸ்ஸலாத்து கைரும் மினன்னவ்ம்"

என்று கூறும்போது பின்வருமாறு கூறிக்கொள்ளல் வேண்டும்.

صَدَقْتَ وَبَرَرْتَ وَبِالْحَقِّ نَطَقْتَ

**"ஸதக்த வபரர்த வனதக்க பில்ஹக்கி"**

**இதன் பொருள்:-** உண்மை சொன்னீர், நன்மையைச் செய்தீர், சத்தியத்தை மொழிந்தீர்.

**குறிப்பு:-** இகாமத்தில் முஅத்தீன்

قَدْ قَامَتِ الصَّلَاةُ

"கத்காமத்திஸ்ஸலாத்"

தொழுகை ஆரம்பமாகி விட்டது என்று கூறும்போது பின்வருமாறு கூறவேண்டும்.

اَقَامَهَا اللهُ وَاَدَامَهَا

"அகாமஹல்லாஹு வஅதாமஹா"

இதன் பொருள்:- வானமண்டலங்களும், பூமியும் நிலைத்திருக்கும் காலமெல்லாம் அல்லாஹுத்தஆலா தொழுகையை நியமமாக நடைபெறவும் நிலைத்திருக்கவும் அரு புரிவானாகவும்.

**33. பாங்கு, இகாமத்தின் பின் ஓதும்துஆ**

اَللّٰهُمَّ رَبَّ هٰذِهِ الدَّعْوَةِ التَّامَّةِ وَالصَّلٰوةِ الْقَائِمَةِ
اٰتِ سَيِّدِنَا مُحَمَّدَنِ الْوَسِيْلَةَ وَالْفَضِيْلَةَ وَالدَّرَجَةَ
الرَّفِيْعَةَ الْعَالِيَةَ الشَّرِيْفَةَ وَابْعَثْهُ مَقَامًا
مَّحْمُوْدَنِ الَّذِيْ وَعَدْتَّهُ وَارْزُقْنَا شَفَاعَتَهُ وَ
اَوْرِدْنَا حَوْضَهُ يَوْمَ الْقِيَامَةِ اِنَّكَ لَا تُخْلِفُ
الْمِيْعَادِ وَصَلَّى اللّٰهُ عَلٰى مُحَمَّدٍ وَّاٰلِهِ وَصَحْبِهِ
اَجْمَعِيْنَ وَالْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ

அல்லாஹும்ம றப்ப ஹாதிஹித் தஃவதித் தாமத்தி வஸ்ஸலாத்தில் காயிமதி ஆத்தி ஸய்திநா முஹம்மதனில் வஸீலத்த வல்பழீலத்த வத்தரஜதர் ரபீ அத்தல். ஆலியத்தஷ் ஷரீபத்த, வப் அதுஹு மகாமன், மகுமூதனில்லதி. வஅத்தஹு வர்ஸுக்நா, ஷபா அதஹு வஅவ்ரித்நா. ஹவ்ழஹு யவ்மல்கியாமத்தி, இன்னக்க லாதுக்லிபுல் மீஆத், வஸல்லல்லாஹு அலா முஹம்மதின் வஆலிஹி வஸஹ்பிஹி, அஜ்மஈன் வல்ஹம்து லில்லாஹி. றப்பில் ஆலமீன்.

இதன் பொருள்:- நாயனே! பரிபூரணமான இந்தப் பிரார்த்தனைக்குரிய றப்பே! நிரந்தரமாய் நடைபெறும் இத் தொழுகைக்குரிய இரட்சகனே! எங்கள் நாயகம் முகம்மது (ஸல்) அவர்களுக்கு ''வஸீலா'' எனப்படும் ஆதாரத்தையும் மேன்மையையும், உயர்ந்த அந்தஸ்தையும், தன்மதிப்பையும் நீ அருள்புரி, மேலும் உன்னால் (திருக்குர் ஆனில்) வாக்களிக்கபபட்ட மகாமன்மஹ்மூத்எனப்படும் புகழப்பட்ட

ஸ்தலத்தில் அவர்களை எழுந்தருள மறுமையில் அருள்புரி அவர்களின் மன்ருட்டத்தை (ஷபா அத்தை) எமக்கு அருள் புரிவாயாக, அன்னாருக்குரிய ('ஹஹ்லுல் கவ்தர்') எனப்படும் ஆற்று நீரைப் பருக அதனண்டையில் எம்மைச் சேர்த்து வைப்பாயாக, நீ வாக்குறுதி செய்தால் அதற்கு மாறு செய்யவே மாட்டாய்.

## 34. தயம்மம் செய்வதன் விபரம்

தயம்மம் என்ருல் உழு அல்லது குளிப்புக்குப் பதிலாக புழுதிமண்ணுல் செய்யப்படும் தூய்மையாகும். உழுசெய்து கொள்வதற்கோ, அல்லது கட்டாயமான குளிப்பை நிறைவேற்றிக் கொள்ளவோ தண்ணீரை உபயோகித்துக் கொள்ள முடியாத அளவுக்கு நோய் ஏற்பட்டிருந்தாலும் அல்லது தண்ணீரை உபயோகித்தால் நோய் கூடுதலாகி விடும் என அஞ்சினுலும் அல்லது தன்னிடமுள்ள தண்ணீரைக்கொண்டு மேற்படி உழு குளிப்புக் கடமைகளை நிறைவேற்றி விட்டால் தனக்கோ அல்லது தனது வாகனமாகிய பிராணிக்கோ குடிப்பதற்குத் தண்ணீர் இல்லாமல் போகுமெனப் பயந்தாலும் உரியவிலை கொடுத்தும் தண்ணீர் வாங்க முடியாவிட்டாலும் தயம்மம் செய்து கொள்ளலாம். தயம்மத்தால் புரியப்பட்ட வணக்கங்களைத் தண்ணீர் கிடைத்த பிறகு கழாச் செய்யவேண்டிய அவசியமில்லை.

## 35. காயத்திற்குரிய பட்டி அல்லது பிளாஸ்டர்

ஒரு புண்ணின் மீது தண்ணீர் படாதிருக்கும் வண்ணம் பேணப்படுமாருல் புண்ணில்லாத உறுப்பைக் கழுவிய பின் அந்தப் புண்ணில் தண்ணீர் படாததற்காக தயம்மம் செய்ய வேண்டும். அப் புண்ணின் உறுப்பைக் கழுவ வேண்டிய அதேநேரத்தில் தயம்மம் செய்ய வேண்டும். குளிப்பு கட்டாயமானவன் தயம்மத்தை முதலாவதாகவோ அல்லது குளிப்பை முதலாவதாகவோ செய்து கொள்ளலாம். உழுவின் பல உறுப்புக்களில் நீர் படக்கூடாத நிலையிருந்தால் அந்த உறுப்பைக் கழுவும் சமயம் அவ்விடத்தில் தயம்மம் செய்ய வேண்டும். தயம்மம் உடையஉறுப்பில் புண்ணிருந்தால் புழுதிக் கையை அதன்மீது தடவியாக வேண்டும்.

இனி புண்ணின்மீது பட்டி அல்லது பலகை வைத்துக் கட்டவேண்டிய நிலை ஏற்பட்டால் உழு செய்தபின் அதை வைத்துக் கட்டவேண்டும் அப்போது காயமில்லாத உறுப்பினங்களைக் கழுவியபின் பட்டி அல்லது சிலாகையின் மீது ஈரக்கையால் தடவ வேண்டும். உழுஇல்லாத நிலையில் பட்டி வைத்துக் கட்டப்பட்டிருந்தால் அதன் மீது ஈரக்கையை தடவுவதோடு சுகமானபின் அவன் தொழுத தொழுகைகளைத் திரும்பவும் தொழவேண்டும்.

## 36. தயம்மமின் ஷர்த்துக்கள் 7

தயம்மம் செய்வதற்கு நிபந்தனைகள் ஏழு அவையாவன:-

1. தயம்மம் செய்யவேண்டிய வஸ்து மண்ணாக இருத்தல் சுண்ணாம்பு, சிமெந்து, மாவு, தனி மணலாக இருக்கக் கூடாது.
2. அந்த மண் சுத்தமானதாக இருத்தல்.
3. முன்னர் தயம்மத்திற்கு உபயோகிக்கப் படாததாக அந்த மண் இருத்தல்.
4. அம்மண் புழுதி உள்ளதாக இருத்தல்.
5. அந்தந்த நேரம் வந்தபின் அந்தந்த வக்துக்காக தயம்மம் செய்தல்.
6. தண்ணீர் உபயோகிக்க வாய்ப்பில்லாமல் இருத்தல்.
7. தயம்மத்திற்கு முன் உடம்பிலுள்ள அசுத்தங்களைச் சுரண்டித் தேய்த்துக் கழுவுதல்.

## 37. தயம்மமின் பர்ளுகள் 7

தயம்மமின் கடமைகள் ஏழு. அவையாவன:-

1. தொழுகையை அல்லது கஃபாவை தவாபு செய்வதை (எதை நினைக்கின்றானோ அதை) ஆகுமாக்கத் தேடுகிறேன் என்று மண்ணில் இருகைகளையும் அடிக்கும் போதே நிய்யத்துச் செய்தல்.
2. மண்ணை நாடுதல்.

3. அந்த மண்ணைத் தன் கைகளாற் தடவிச் செப்பப் படுத்தல்.

4 முந்திய அடியால் முகத்தைத் தடவிக் கொள்ளுதல்.

5. இரண்டாம் அடியால் இரு கைகளையும் முழுங்கை உட்பட தடவிக் கொள்ளுதல்

6. மேற்கூறியவைகளை வரிசைக் கிரமமாகச் செய்தல்.

7. முகத்திற்கு ஓர் அடியும், கைகளுக்கு ஓர் அடியும், அந்தமண்ணில் இரண்டு அடிகள் தனித்தனியாக அடித்தல் வேண்டும்.

## 38. தயம்மமின் சுன்னத்துக்கள் 6

தயம்மமின் சுன்னத்துக்கள் ஆறு. அவையாவன:-

1 கைகளை மண்ணில் அடித்துப் பிறகு இரு புறங்கைகளாலும் தட்டிவிடுதல்.

2. ஆகுமாக்கத் தேடும் செயலை வாயால் உரைத்தல். உதாரணமாக, தொழுகையை ஆகுமாக்குகிறேன் என்றோ, அல்லது கஃபானவை தவாபு செய்ய ஆகுமாக்குகிறேன் என்றோ வாயாற் கூறுதல்.

3. இவ்வாறு கூறிய பின் ''பிஸ்மில்லாஹ்'' கூறுத

4. தடவும்போது வலது கையை முதலாவதாகத் தடவுதல்.

5. முகத்தை மஸ்ஹு செய்தபின் சுணக்கமின்றிக் கைகளுக்கும் மஸ்ஹு செய்தல்.

6. கைகளுக்கு மஸ்ஹு செய்யும் போது இடதுகையின் பெருவிரலைத்தவிர மற்ற விரல்களின் உட்புறத்தை வலது கைவிரல்களின் முதுகுப்புறத்தில் (மேற்பகுதியில்) வைத்தவண்ணம் முழுங்கைவரை தடவி அதன்பின் இடதுகையின் உள்ளங்கையை வலதுகையின் உடபாகத்தில் (கீழ்ப்பகுதியில்) தொட்டவண்ணம் மணிக்கட்டுவரை தடவுதல். பின்னர் இடதுகைப் பெருவிரலை வலதுகைப் பெருவிரலின் மேற்பா

கத்தில் தடவுதல். இதேவிதமாக இடதுகைக்கும், வலது கையால் தடவ வேண்டும்.

## 39. தயம்மத்தை முறிக்கும் காரியங்கள் 7

தயம்மத்தை முறிக்கும் காரியங்கள் ஏழு. அவையாவன:-

1. உழுவை முறிக்கும் ஐந்து காரியங்கள்.

6. தண்ணீரில்லாதவன் அதனைப் பெற்று விடுதலும் அதை உபயோகிக்க இயல்பிருத்தலும்.

7. இஸ்லாத்தை விட்டும் மதம் மாறிப் போகுதல்.

**குறிப்பு:** ஒரு தயம்மத்தைக் கொண்டு ஒரேஒரு வக்து பர்ளு தொழுகையையும், அதன் சுன்னத்துத் தொழுகையையும், மையித்துத் தொழுகையையும், குர்ஆனைத் தொடுதல், அந்த ஓதலில் உள்ள சஜ்தா திலாவத் ஆகியவற்றைச் செய்யலாம். மற்றொரு வக்தின் பர்ளு தொழுகையை நிறைவேற்ற முடியாது.

ஆனால் மையித்துத் தொழுகைக்கென்றோ அல்லது குர்ஆனைத்தொடுதல், அல்லது அதிலுள்ள சஜ்தா திலாவத்தை நினைத்துக் கொண்டோ தயம்மம் செய்துவிட்டு அந்தத் தயம்மத்தால் வேறு எந்த பர்ளு தொழுகையையும் தொழ முடியாது.

## 40. பர்ளு தொழுகை விபரம்

பர்ளு இருவகைப் படும்

1 பர்ளுஐன்
2 பர்ளு கிபாயா

பர்ளுஐன்:- அதாவது, பராய வயதடைந்த முஸ்லிமான அறிவுள்ள சுதந்திரமான ஆண், பெண் ஒவ்வொருவர் மீதும் கடடாய கடமையாகும் ஐங்காலத் தொழுகை இதற்கு உதாரணமாகும் இதை ஒவ்வொருவரும் நிறைவேற்ற வேண்டும் இதை விடுவது பெரும் குற்றமாகும்

பர்ளு கிபாயா:- இது பொதுவான கடமையாகும். ஊரில்

உள்ளவர்கள் அனைவர்மீதும் கடமையாகும். ஆனால் அவ்வூரிலுள்ள ஒரு சிலர் இதனைச் செய்து முடித்துவிட்டால் எல்லோரும் இக்கடமையில் நின்றும் தப்பிவிடுவார்கள். மையித்துத் தொழுகை இதற்கு உதாரணமாகும் இதை ஊரில் உள்ளவர்களில் ஒரு சிலர் மட்டும் நிறைவேற்றினாலும் போதுமாகும்.

## 41. சுன்னத்

பெருமானாரின் நடைமுறைகளே சுன்னத் எனக் கூறப்படுகிறது. இதனிலும் இரண்டு வகையுண்டு.

1 சுன்னத் முஅக்கதா - பெலவந்தமான சுன்னத்

2 சுன்னத் உஐறுல் முஅக்கதா - பெலவந்தமில்லாத சுன்னத்

## 42. சுன்னத் முஅக்கதா

பெலவந்தமான இந்த சுன்னத்தை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஊரிலிருக்கும் போதும், பிரயாணத்தின் போதும் விடாமல் நிறைவேற்றி வந்தார்கள். இதன் விபரமாவது:- பர்ளு தொழுகைக்கு முன்னும் பின்னும் தொழப்படும் 10 ரக் அத்துக்களும்; இரு பெருநாட்களின் தொழுகை, கிரகணத் தொழுகை முதலியன இதற்கு உதாரணங்களாகும்.

## 43. சுன்னத் உஐறுல் முஅக்கதா

பெலவந்தமில்லாத இந்த சுன்னத்தை பெருமானார் (ஸல்) அவர்கள் விடாமல் தொழுது வந்தாலும், சிலசமயங்களில் செய்யாமலும் இருந்துள்ளார்கள்.

உதாரணமாக ஐங்காலத் தொழுகையோடு தொடர்புள்ள 10 ரக் அத்துக்கள் நீங்கலாகவுள்ள 12 ர[illegible] அத்துக்களாகு[illegible] மேலும் பர்ளான ஐங்காலத் தொழுகையுடன் சேர்ந்த இந்த சுன்னத்தான தொழுகைகளுக்கு பொதுவாக ராத்திபத்தான (வழக்கமான) சுன்னத் என்று கூறபபடும்.

## 44. அதாஅன் - கழாஅன்

உரிய நேரத்தில் நிறைவேற்ற வேண்டிய தொழுகை அல்லது இதர கடமைகளை, உரியநேரத்தில் நிறைவேற்றும் போது அதற்கு அதாஅன் என்றும் நேரம் தவறிப்போன பின் அதை நிறைவேற்றுவதற்கு கழாஅன் என்றும் கூற வேண்டும். அவ்வாறே ஓர் இமாமைப் பின்தொடர்ந்து தொழும் தொழுகைக்கு மஃமூமன் (இமாமைப் பின்தொடர்ந்தவனாக) என்று கூறவேண்டும். ஆனால் தனித்துத் தொழுபவர் மஃமூமன் என்று சொல்வதை விட்டு விடவேண்டும்

மேலும், ஒரு ரக்அத் தொழுகைக்கு ரக் அதன் என்றும் இரண்டு ரக்அத் தொழுகைக்கு ரக்அதைனி என்றும் மூன்று ரக்அத் தொழுகைக்கு தலாத ரக்ஆத்தின் என்றும் நான்கு ரக்அத் தொழுகைக்கு அர்பஅ ரக்ஆத்தின் என்றும் கூற வேண்டும். உதாரணமாக: மஃரிப் தொழுகையில் இமாமைப் பின்பற்றித் தொழுபவர். உஸல்லீ பர்ளல் மஃரிபி தலாத ரக்ஆத்தின் அதாஅன் முஸ்தக்பிலன் இலல் கஃபத் திஷ்ஷரீபத்தி லில்லாஹித்தஆலா மஃமூமன் அல்லாஹு அக்பர் என்று கூறி தக்பீர் கட்டிக்கொள்ள வேண்டும்.

இதன் பொருள்: ''இந்த மஃரிப்தொழுகையின் பர்ளு மூன்று ரக் அத்துக்களையும் இமாமைப் பின்தொடர்ந்து சிறப்பான கஃபத்துள்ளாவை முன்னோக்கியவனாக அதாவாக அல்லாஹ் வுக்காகத் தொழுகிறேன்; அல்லாஹ் மஹா பெரியவன்'' என்பதாகும்.

## 45. பர்ளுக்கு முன்னால் - பர்ளுக்கு பின்னால்

பர்ளுத் தொழுகைக்கு முன்னால் உள்ள சுன்னத்துத் தொழுகைகளுக்கு கப்பலிய்யதன் (முன்னால் உள்ளவை) என்றும், பர்ளுத் தொழுகைகளுக்குப் பின்னால் தொழப்படும் சுன்னத்துத் தொழுகைகளுக்கு பஃதிய்யதன் (பின்னால் உள்ளவை) என்றும் கூறவேண்டும்

## 46. ஐங்காலத்தொழுகை (பர்ளு)களின் ரக்அத்துக்கள்

## 47. ராத்திபத்தான சுன்னத்தின் ரக்அத்துக்கள்

ஸுப்ஹு:- பர்ளு 2ரக்அத்
பர்ளு தொழமுன் 2 ரக்அத் சுன்னத்து

லுஹர்:- பர்ளு தொழமுன் 4 அல்லது 2ரக்அத்சுன்னத்து
பர்ளு 4 ரக்அத்துக்கள்
பர்ளுக்குப்பின் 4 அல்லது 2ரக்அத் சுன்னத்து

அஸர்:- பர்ளு தொழமுன் 4 அல்லது 2 ரக்அத்சுன்னத்
பர்ளு 4 ரக்அத்துக்கள்

மஃரிப்:- பர்ளு தொழமுன் 2 ரக்அத் சுன்னத்து
பர்ளு 3 ரக்அத்துக்கள்
பர்ளுக்குப்பின் 2 ரக்அத் சுன்னத்

இஷா:- பர்ளு தொழமுன் 4 அல்லது 2 ரக்அத் சுன்னத்
பர்ளு 4ரக்அத்துக்கள்
பர்ளுக்குப்பின் 4 அல்லது 2 ரக்அத் சுன்னத்து

வித்ரு:- 3 அல்லது 1 ரக்அத்து

குறிப்பு:- மூன்று ரக்அத் வித்ரு தொழுவோர் 2ரக்அத்தை ஒரு ஸலாமுடனும். பின்னர் ஒரு ரக்அத்தை ஒருஸலாமுடனும் தனித்தனியாகத் தொழவேண்டும்.

## 48. தொழுகையின் ஷர்த்துக்கள் 10

தொழுகையின் நிபந்தனைகள் பத்து. அவையாவன:-

1. முஸ்லிமாக இருத்தல்.
2. தம்யீஸ் எனப்படும் அறிவைப் பெறுதல்.
3. ஜனுபத் என்னும் பெருந்தொடக்கு மாதாந்த ருது, பிரசவருது வுழு முறித்தல் ஆகியன இல்லாதிருத்தல்
4. உடல், உடை, இடம் ஆகிய மூன்றிலும் நஜீஸைவிட்டும் துப்பரவாயிருத்தல்.

5. ஆண்பிள்ளைகளும், அடிமையும், அடிமைட் பெண்ணும் தொப்புள் தொடக்கம் முட்டுக்கால் வரை மறைத்தல் (இதற்கு அவ்றத்தை மறைத்தல் என்று கூறப்படும்)

6. கிப்லா என்னும் கஃபாவின் திசையை இயன்றளவு சரிநோக்கிக் கொள்ளுதல்.

7. தொழுகை, தன்மீது தவிர்க்க முடியாத கட்டாய கடமை என்பதை உணர்ந்திருத்தல்.

8. அந்தத் தொழுகைகளின் உரிய நேரங்களை அறிதல்.

9. தொழும் விதத்தை அறிதல்.

10 பர்ளை பர்ளு என்றும். சுன்னத்தை சுன்னத் என்றும் விபரமாக அறிந்திருத்தல்.

## 49. தொழுகையின் பர்ளுகள் 19

தொழுகையின் கடமைகள் பத்தொன்பது. அவையாவன:-

1. நிய்யத்துச் செய்தல் (மனதில் நினைத்தல்)

2. அந்த நிய்யத்துடன் அல்லாஹு அக்பர் என்ற தக்பீரைச் சொல்லுதல்.

3. பர்ளுத் தொழுகைகளில் இயன்றவர்கள் நின்று தொழுதல்.

4. பிஸ்மில்லாஹ்வுடன் அல்ஹம்து சூரத்தை ஓதுதல்.

5 ருக்கூஃ செய்தல்

6. அந்த ருக்கூஃவில் தாமதித்தல்.

7. இஃதிதால் என்னும் சிறு நிலைக்கு உயருதல்.

8. அந்தச் சிறு நிலையில் தாமதித்திருத்தல்.

9. முதலாவது ஸஜ்தா செய்தல்.

10. அந்த ஸுஜூதில் தாமதித்திருத்தல்.

11. முதலாம் ஸஜ்தாவிலிருந்து சிறு இருப்புக்கு வருதல.

12. அந்தச் சிறு இருப்பில் தாமதித்திருத்தல்.

13. இரண்டாம் ஸஜ்தா செய்தல்.

14. அந்த ஸுஜூதில் தாமதித்திருத்தல்

15. பிந்திய அத்தஹிய்யாத் ஓதுவதற்காக இருத்தல்.

16. அந்த இருப்பில் அத்தஹிய்யாத் ஓதுதல்.

17. பிந்திய அத்தஹிய்யாத்தில் பெருமானுர் (ஸல்) அவர்கள் மீது ஸலவாத்து ஓதுதல்.

18. வலது பக்கம் முதலாம் ஸலாம் சொல்லுதல்.

19. இப்போது இங்கு விபரிக்கப்பட்ட 18 பர்ளுகளையும் சொல்லப்பட்ட ஒழுங்கு முறைப்படி கிரமமாய்ச் செய்தல்.

## 50. அப்ஆழு சுன்னத்துக்கள் 12

அப்ஆழு சுன்னத்துக்கள் பன்னிரண்டு அவையாவன:-

1. இரண்டு ரக்அத்துக்களுக்கு மேற்பட்ட தொழுகையில் முந்திய அத்தஹிய்யாத்தை ஓதுதல்.

2. அதற்காக இருப்பில் இருத்தல்.

3. அந்த அத்தஹிய்யாத்தில் நபி நாயகம் (ஸல்) அவர்கள் மீது ஸலவாத்து ஓதுதல்.

4. அந்த ஸலவாத்துக்காக இருத்தல்.

5. கடைசி அத்தஹிய்யாத்தில், வஅலா ஆலி முகம்மதின் என்று சேர்த்துக் கூறுதல், (குறிப்பு:- வஅலா ஆலி முகம்மதின் என்ருல் நபிகள் நாயகத்தின் குடும்பத்தார்கள் என்பதைக் குறிக்கும்)

6. இதை ஓதுவதற்காக இருத்தல்.

7. ஸுப்ஹூத் தொழுகையிலும், றம்ழான்மாதம் பிறை 16 தொடக்கம் முடியும் வரையும், இஷாவுக்குப்பின் தொழப்படும் வித்று தொழுகையிலும் 'குனூத் ஓதுதல்'

8 அந்த குனூத்திற்காக நிற்றல்

9. அந்த குனூத்துக்களில் நபிகள்நாயகத்தின் மீது ஸல வாத்து ஓதுதல்.

10. அந்த ஸலவாத்துக்காக நிற்றல்

11 அந்த ஸலவாத்தில் ''வஅலா ஆலிஹி'' என்று கூறி நாயகத்தின் குடும்பத்தினரைச் சேர்த்தல்.

12 அதனை ஓதுவதற்காக நிற்றல்

## 51. அலங்கார சுன்னத்துக்கள் 17

ஹைஆத் எனப்படும் அலங்கார சுன்னத்துக்கள் பதினேழு அவையாவன:-

1 ஆரம்ப தக்பீரிலும், ருகூஇல் குனியும் போதும் அதை விட்டு நிமிர்ந்து நிலைக்கு வரும்போதும், முந்திய அத் தஹிய்யாத்திலிருந்து எழுந்து நிலையில் நிற்கும் போதும், இரு கைகளையும் இரு தோள்வரை உயர்த்திக் கீழே விடுதல்

2 தொப்புளுக்கும் நெஞ்சுக்கும் இடையில் இடதுகை மணிக்கட்டின்மேல் வலதுகையை வைத்துக் கட்டுதல்

3 மையித்துத் தொழுகையைத் தவிரவுள்ள மற்று தொழுகைகளின் போது தொழ ஆரம்பித்து - ஆரம்பத் தக்பீர் கட்டியவுடன் மெதுவாக 'வஜ்ஜஹ்து' ஓதுதல்

4 அல்ஹம்து சூரத்தை ஓதுவதற்கு முன் எல்லா ரக்அத்துகளிலும் அஊது பில்லாஹி மினஷ் ஷைத்தானிற் றஜீம்மையும் சேர்த்து ஓதுதல்.

5 ளுஹர், அஸர் தொழுகைகளில் ஓதும் சூரத்துக்களை சப்தமின்றியும், மற்றைய மூன்று வேளைத் தொழுகைகளில் ஓதும் சூரத்துக்களை சப்தமிட்டும் ஓதுதல்

6 அல்ஹம்து சூரத்தை ஓதிமுடிந்ததும் ஆமீன் (இந்தப் பிரார்த்தனையை ஏற்றுக் கொள்வாயாக) என்று கூறுதல்

7. இரண்டு ரக் அத்துகளுக்கு மேற்பட்ட தொழுகைக ளில், முந்திய இரண்டு ரக் அத்துகளிலும் **அல்ஹம்து** (பாத்திஹா) சூரத்துடன், வேறு ஏதாவது ஒரு சூரத் தையும் ஓதுதல்.

8. ருக்கூஉ ஸுஜுதுகளுக்குக் குனியும் போதும் ஸுஜு தைவிட்டு நிமிரும் போதும் **அல்லாஹு அக்பர் என்று** சொல்லுதல். (ருக்கூவிலிருந்து நிலைக்கு வரும் போது இருகைகளையும் உயர்த்தி

سَمِعَ اللّٰهُ لِمَنْ حَمِدَهٗ

**'ஸமி அல்லாஹு லிமன் ஹமிதாஹ்'** என்று கூறுதல்.

இதன் பொருள்:- அல்லாஹ்வைப் புகழ்ந்தவரின் புக ழை அல்லாஹ் அங்கீகரிப்பானாக!

**10. ருக்கூவில் இருக்கும் போது**

سُبْحَانَ رَبِّيَ الْعَظِيْمِ وَبِحَمْدِهٖ

**சுப்ஹான றப்பியல் [illegible]ம் வபி ஹம்திஹீ**
என்று மூன்று தடவையும்,

இதன் பொருள்:- மகத்தான எனது இறைவனைப் புகழ்ந் து துதிக்கிறேன்.

**ஸுஜூதில் இருக்கும் போது**

سُبْحَانَ رَبِّيَ الْاَعْلٰى وَبِحَمْدِهٖ

**ஸுப்ஹான றப்பியல் அஃலா வபிஹம்திஹி**
என்று மூன்று தடவையும் கூறவேண்டும்.

இதன் பொருள்:- உயர்வான எனது இறைவனைப் புகழ்ந் து துதிக்கிறேன்.

ருக்கூவில் இருந்து

سَمِعَ اللّٰهُ لِمَنْ حَمِدَهُ

'ஸமிஅல்லாஹு லிமன் ஹமிதாஹ்,
என்று கூறி நிலைக்கு வந்ததும்.

رَبَّنَا لَكَ الْحَمْدُ مِلْأَ السَّمٰوَاتِ وَمِلْأَ الْأَرْضِ
وَمِلْأَ مَا شِئْتَ مِنْ شَيْئٍ بَعْدُ

றப்பனா லக்கல் ஹம்து மில் அஸ்ஸமாவாத்தி வமில்அல் அர்ழி வமில்அ மாஷிஃத மின்ஷையின் பஃது
என்று கூறவேண்டும்.

இதன் பொருள்:- எனது இரட்சகா! புகழ்யாவும் உனக்கே வான மண்டலங்கள் நிரம்பவும் பூமி நிரம்பவும் இவை தவிர நீ நாடிய இதர பொருட்கள் நிரம்பவும் உள்ள புகழ் யாவும் உனக்கே உரியவை.

ஸுஜூதிலிருந்து சிறு இருப்புக்கு வந்தவுடன்

رَبِّ اغْفِرْ لِيْ وَارْحَمْنِيْ وَاجْبُرْنِيْ وَارْفَعْنِيْ
وَارْزُقْنِيْ وَاهْدِنِيْ وَعَافِنِيْ وَاعْفُ عَنِّيْ

"றப்பிஃபிர்லீ வர்ஹம்னீ வஜ்புர்னீ வர்பஃனீ வர்சுக்னீ வஹ்தினீ வஆபினீ வஃபு அன்னீ" என்று ஓதவேண்டும்.

இதன் பொருள்: நாயனே! எனது பாவங்களை மன்னித்தருள எனக்கு அருள்புரி என் முறிவைப பெருத்து, என்னை உயர்வாக்கு! எனக்கு உணவளி! எனக்கு நேர்வழி காட்டு! எனக்கு சுவாத்தியத்தைத் தந்தருள்! எனனை மன்னித்தருள்!

11 நடுஇருப்பிலும், அத்தஹிய்யாத்து இருப்புக்களிலிருக்கும் போதும், இரு துடைகளின் மீது இரு உள்ளங்

கைகளும் பதியும் வண்ணம் விரல்களை விரித்துவைத்தல் (அதாவது விரிக்காமலும், சேர்க்காமலும் இயற்கையான முறையில் வைத்தல்)

12. அத்தஹிய்யாத்தில், ஷஹாதத் கலிமாவிலுள்ள 'இல்லல்லாஹு' என்று கூறும்போது கலிமாவிரலை உயர்த்துதல்.

13. அத்தஹிய்யாத்துல் முபாரகா துஸ்ஸலவாத்துத் தைய்யுபாத்து என்று சேர்த்துத் தொடர்ச்சியாக ஓதுதல்.

14. நடு அத்தஹிய்யாத்து இருப்பிலும், இரண்டு ஸுஜூதுகளுக்கிடையில் அமரும் இருப்பிலும் வலதுகால் படத்தையூன்றி இடது காலின் மீது இருத்தல்.

15. கடைசி அத்தஹிய்யாத் இருப்பில் இடதுகாலை வலது பக்கத்தில் வெளிப்படுத்தி சம்மனமாகிய பித்தட்டின் மீது அமர்தல்.

16. நிரப்பமான அத்தஹிய்யாத்து, ஸலவாத்து, துஆக்கள் ஓதுதல்.

17 இரண்டாம் ஸலாம் (இடது புற ஸலாம்) கூறுதல்.

## 52. தொழுகையை முறிக்கும் காரியங்கள் 9

தொழுகையை முறிக்கும் காரியங்கள் ஒன்பது. அவையாவன:-

1 தொழுகையை விட்டுவிடலாம்; என்று எண்ணினாலும் தொழுது முடிப்போமா? அல்லது விடுவோமா? என இரு மனம் கொண்டாலும் தொழுகை முறியும்.

2. தொடராக மூன்று செயலைச் செய்தல். ஆனால் சொறி, சிரங்கு, நடுக்கம் முதலியவற்றால் அவதிப்படுபவர்கள் பலமுறை சொறிந்தாலும், நடுங்கினாலும் தொழுகை முறியாது.

குறிப்பு:- மூன்று செயல் என்பது; ஒருஇடத்தில் தன் கை உசும்பாமலிருக்க, அதன் விரலால் எத்தனை

முறை சொறிந்தாலும் தொழுகை முறியாது.

3. குர்ஆன், துஆ, திக்ரு அல்லாத இரு எழுத்துக்களைக் கொண்ட சொல்லை மொழிவதாலும், கனைப்பதாலும் தொழுகை முறியும். ஆனால் நோயாளர் இவ்வாறு செய்தால் தொழுகை முறியாது. இதே போன்று, தொழுகைக்கு பர்ளான அளவுக்கு ஓத வேண்டிய ஒதலை ஓதமுடியாதிருக்கும் நிலைமையில் கனைத்து அதனால் இருஎழுத்துக்கள் வெளியானாலும், நோன்பாளி காரலை உட்கொள்ளாமல் இருப்பதற்காக கனைத்து, அதனால் இரு எழுத்துக்கள் வெளிப்பட்டாலும் தொழுகை முறியாது.

4. நோன்பை முறிக்கும் வஸ்த்தக்களை விழுங்குதல், தொண்டைக்கு வெளியே வந்த காரலை விழுங்குதல் ஆகியவைகள் தொழுகையை முறிக்கும்.

5. கிப்லா திசையை விட்டும் நெஞ்சைத் திருப்புதல்.

6. செயலாலுள்ள பர்ளுகளை ஞாபகத்துடன் அதிகப்படுத்தல்.

7. காற்றடிக்கும்போது புடவை உயர்வதனால் அவ்ரத் (மறைக்கவேண்டிய உறுப்பு) வெளியாகினால் - அதை உடனே தன்கையால் மறைக்காவிட்டால் தொழுகை முறியும்.

8. சப்தமாய்ச் சிரிப்பது, அழுவது, முணங்குவது ஆகியவையும் தொழுகையை முறிக்கும்.

9. ஒரு பர்ளை அல்லது ஷர்த்தை விட்டால் தொழுகை முறிந்து விடும்.

## 53. ஸஜ்தா ஸஹ்வு

கீழ் விபரிக்கப்படும் ஐந்து காரியங்களில் ஏதாவது ஏற்படுமிடத்து மறதிக்காக ஸஜ்தா ஸஹ்வு செய்யவேண்டும்.

1 அப்ஆழு சுன்னத்துக்களில் ஒன்றை விட்டு விடல்.

2. அவற்றில் ஒன்றை விட்டு விட்டதாகச் சந்தேகம் ஏற்பட்டால்.

3 ஆரம்ப தக்பீரும், ஸலாமும் தவிர ஏனைய சொல்லாலுள்ள பர்ளுகளை நிறைவேற்ற வேண்டிய இடமல்லாத வேறு இடத்தில் நிறைவேற்றல்.

4. ஞாபகமாய்ச் செய்தால் தொழுகை முறியும் என்ற காரியங்களை மறதியாகச் செய்தல்.

5. தான் தொழுத தொழுகையின் ரக் அத்துக்களில் சந்தேகம் ஏற்பட்டால்.

## 54. ஸஜ்தா ஸஹ்வு செய்யும் முறை

தொழுகையில் கடைசியில் ஸலாம் கொடுக்க முன்னதாக இரண்டு ஸுஜூது செய்ய வேண்டும் அந்த ஒவ்வொரு ஸுஜூதிலும்

سُبْحَانَ مَنْ لَا يَنَامُ وَلَا يَسْهُوْ

**ஸுப்ஹான மல்லா யனூமு வலா யஸ்ஹூ**


**இதன் பொருள்:-** மறதியும் நித்திரையுமில்லாத நாயனை நான் துதிக்கிறேன் என்று மூன்று முறை சொல்லி பின்பு ஸலாம் கொடுக்க வேண்டும்.

## 55. தொழுகை

இஸ்லாத்தின் இரண்டாவது கடமை தொழுகையாகும். உடம்பினுல் செய்யும் வணக்கங்களில் மிகவும் மேலானது தொழுகையே. மேலும் காபிர்களையும், முஸ்லிம்களையும் பிரித்துக் காட்டும் அடையாளச் சின்னமாகவும் விளங்குகிறது தொழுகை, தொழுகையின் சிறப்பு முக்கியத்துவம் பற்றி பல ஹதீஸ்கள் கூறப்பட்டுள்ளன,

''இஸ்லாம் மார்க்கத்தில் தொழுகை ஒரு கட்டடத்தைப் போன்றது தொழுகையை விடாமல் தொழுது வருப்பவர் அந்த இஸ்லாம் என்னும் கட்டடத்தை நிலை நிறுத்தி விட்டார். ஆனுல் தொழுகையைவிட்டவர். அந்தக்கட்டடத்தை இடித்துத் தகர்த்து விட்டார்'' என எங்கள் நாயகம் (ஸல்) அவர்கள் அருளியுள்ளார்கள்.

## 56. தொழும் முறை



தொழுகைக்காக தக்பீர்கட்ட ஆயத்தமாகி நிய்யத்தை மனதில் நினைத்தவாறு வாயாற் கூறி ஆடாமல், அசையாமல் ''கஃபா'' வின் திசையை நோக்கி நேராக நிமிர்ந்து 1ம் படத்தில் உள்ளபடி நிற்க வேண்டும். அதன்பிறகு,

படம் 1



இரு காதுகளுக்கும் நேராக இருகைகளையும் உயர்த்தி 2ம் படத்திலுள்ளபடி அல்லாஹு அக்பர் எனக் கூறி இருகைகளையும் கீழே கொண்டுவந்து மார்புக்கும் தொப்புளுக்கும் மத்தியில் இடதுகையை வைத்து, அதன்மணிக்கட்டை வலதுகையினால் பிடித்து

படம் 2



3ம் படத்திலுள்ளது போல் தக்பீர் கட்டிக் கொள்ள வேண்டும்.

தக்பீர் கட்டி முடிந்தவுடன்,

படம் 3

وَجَّهْتُ وَجْهِيَ لِلَّذِي فَطَرَ السَّمٰوٰتِ وَالْاَرْضَ
حَنِيْفًا مُّسْلِمًا وَّمَا اَنَا مِنَ الْمُشْرِكِيْنَ اِنَّ صَلَاتِيْ
وَنُسُكِيْ وَمَحْيَايَ وَمَمَاتِيْ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ
لَا شَرِيْكَ لَهٗ وَبِذٰلِكَ اُمِرْتُ وَاَنَا مِنَ الْمُسْلِمِيْنَ

வஜ்ஜஹ்து வஜ்ஹிய லில்லதீ பதரஸ்ஸமாவாத்தி வல் அர்ழ ஹனீபம் முஸ்லிமன், வமாஅன மினல் முஷ்ரிகீன். இன்னஸலாத்தி வனுஸ்கி, வமஹ்யாய வமமாத்தீ, லில்லாஹி றப்பில் ஆலமீன். லாஷரீக்கலஹு வபிதாலிக்க உமிர்த்து வஅனமினல் முஸ்லிமீன் - என ஓதவேண்டும்.

இதன் பொருள்:- உண்மையின் பக்கம்சாய்ந்த முஸ்லிமானவனாக இருக்கும் நிலையில், வானங்களையும் பூமியையும் படைத்த அல்லாஹ்வின் பக்கம் எனது முகத்தை திருப்பி விட்டேன், நான், இணைவைத்து வணங்கும் முஷ்ரிகீன்களில் (காபிர்களில்) ஒருவனாகவுமில்லை. ஆகவே எனதுதொழுகையும் இதர வணக்கமும், என்சீவியமும், மரணமும் உலகஇரட்சகனாகிய அல்லாஹ்வுக்கேயாகும். அவனுக்கு இணை துணை எவருமில்லை. அவ்வாறே நான் ஏவப்பட்டுள்ளேன். நான் முஸ்லீம்களில் ஒருவனாக இருக்கிறேன்

## 57. சூரத்துல் பாத்திஹா

اَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيْمِ

அஊதுபில்லாஹி மினஷ் ஷைத்தானிர்றஜீம்.

இதன் பொருள்:- விரட்டப்பட்ட ஷைத்தானின் தீங்கை விட்டும் நான் அல்லாஹ்விடம் காவல் தேடுகிறேன்.

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ ۝ الرَّحْمٰنِ
الرَّحِيْمِ ۝ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۝ اِيَّاكَ نَعْبُدُ
وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ۝ اِهْدِنَا الصِّرَاطَ
الْمُسْتَقِيْمَ ۝ صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۝

பிஸ்மில்லாஹிர்ரகுமானிர்றஹீம்

**இதன் பொருள்:-** அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருநாமத்தால் ஆரம்பிக்கின்றேன்.

1. "அல்ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன்.
2. அர்ரஹ்மானிர்ரஹீம்.
3. மாலிகியவ்மித்தீன்.
4. இய்யாகநஃபுது. வஇய்யாக நஸ்தஈன்
5. இஹ்திநஸ்ஸிராத்தல், முஸ்தகீம்.
6. ஸிராத்தல்லதீன அன்அம்த அலைஹிம்,
7. கைரில் .மஃழூபி அலைஹிம் வலழ்ழால்லீன்" ஆமீன்.

**இதன் பொருள்:-** 1. எல்லாப்புகழும் அல்லாஹ்வுக்கே. படைப்புகள் யாவற்றையும் படைத்துப் போஷித்

துப் பரிபக்குவப்படுத்துவோன்.

2. அவன் அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன்.

3. இறுதிநாளின் அதிபதி அவன்.

4. எங்கள் நாயனே! நாங்கள் உன்னையே வணங்குகின்றோம், உன்னிடமே உதவியும் தேடுகின்றோம்.

5 நீ எங்களை நேரான வழியில் நடாத்துவாயாக.

6. எவர்களுக்கு நீர் அருள்புரிந்தாயோ அவர்கள் (சென்ற) வழி

7. (உன்) கோபத்திற்குள்ளானவர்களோ, வழிதப்பியவர்களோ சென்ற வழியல்ல.

இந்தப்பிரார்த்தனையை அங்கீகரிப்பாயாக - என்று ஓதியபின், நான்கு அல்லது மூன்று ரக் அத்துத் தொழுகையாயின் முந்திய இரண்டு ரக்அத்துக்களிலும் பாத்திஹா ஸூராவுக்குப்பின் குர்ஆனில் உள்ள ஏதேனுமோர் ஸூரத்தைச் சேர்த்து ஓத வேண்டும். உதாரணமாக முதலாம் ரக் அத்தில் சூறத்துல் பலக்கையும் (குல்அஊது பிறப்பில் பலக்) இரண்டாம் ரக் அத்தில் சூரத்தின் நாசையும் (குல்அஊது பிரப்பின்னாஸ்) ஓதலாம்.

### 58. சூரதுல் பலக்

سُورَةُ الْفَلَقِ مَدَنِيَّة — بِسْمِ اللَّهِ الرَّحْمَٰنِ الرَّحِيمِ — وَهِيَ خَمْسُ آيَاتٍ

قُلْ أَعُوذُ بِرَبِّ الْفَلَقِ ۝ مِنْ شَرِّ مَا خَلَقَ ۝

وَمِنْ شَرِّ غَاسِقٍ إِذَا وَقَبَ ۝ وَمِنْ شَرِّ النَّفَّٰثَٰتِ

فِي الْعُقَدِ ۝ وَمِنْ شَرِّ حَاسِدٍ إِذَا حَسَدَ ۝

"பிஸ்மில்லா ஹிர்ரஹ்மானிர்ரஹீம்"

1. குல்அஊது பிறப்பில் பலக்.
2. மின்ஷர்ரி மாகலக்.
3. வமின்ஷர்ரி ஆஸிகின் இதா வகப்.
4. வமின் ஷர்ரின் நப்பாதாத்தி பில்உகதி.
5. வமின்ஷர்றி காசிதின் இதா ஹஸத்.

## 59. ஸூரத்துன்னாஸ்

| | | |
|---|---|---|
| اٰيَاتٌ وَهِيَ سِتٌّ | بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ | مَدَنِيَّة سُوْرَةُ النَّاسِ |

قُلْ اَعُوْذُ بِرَبِّ النَّاسِ ۙ مَلِكِ النَّاسِ ۙ

اِلٰهِ النَّاسِ ۙ مِنْ شَرِّ الْوَسْوَاسِ ۙ الْخَنَّاسِ ۙ

الَّذِيْ يُوَسْوِسُ فِيْ صُدُوْرِ النَّاسِ ۙ

مِنَ الْجِنَّةِ وَالنَّاسِ ع

"பிஸ்மில்லா ஹிர்ரஹ்மானிர்ரஹீம்"

1. குல்அஊது பிறப்பின்னாஸ்.
2. மலிகின்னாஸ்.
3. இலாஹின்னாஸ்.
4. மின்ஷர்ரில் வஸ்வாஸ்.
5. அல்ஹன்னா ஸில்லதீ யுவஸ்விஸூ பீஸூதூரின்னாஸ்.
6. மினல் ஜின்னத்தி வன்னாஸ்.

என்று ஓதிமுடிந்தவுடன், அதன் பிறகு 'அல்லாஹு அக்பர்' எனக்கூறி, ருக்கூஉக்கு (குனிதலுக்கு) (4ம் படத்திலுள்ளபடி) வரவேண்டும். அந்த ருக்கூஇல்.




سُبْحَانَ رَبِّيَ الْعَظِيْمِ وَبِحَمْدِهٖ

ஸுப்ஹான ரப்பியல் அழீம் வபிஹம்திஹி.

படம் 4

இதன் பொருள்:- "எனது மகத்தான இறைவனைப் புகழ்ந்து பரிசுத்தப் படுத்துகிறேன்." என்று மூன்று முறை கூறி,

سَمِعَ اللّٰهُ لِمَنْ حَمِدَهٗ



"ஸமிஅல்லாஹு லிமன் ஹமிதாஹ்"

படம் 5

இதன் பொருள்:- "அவனைப் புகழ்ந்தவரின் புகழை


அல்லாஹ் செவிமடுக்கிறான்'' என்று கூறியவண்ணம் இஃதி தால் என்னும் நிலைக்கு 5ம் படத்திலுள்ளது போல் நிமிர்ந்து நிற்க வேண்டும். இவ்வாறு நிற்கும்போது,

رَبَّنَا لَكَ الْحَمْدُ مِلْأَ السَّمٰوَاتِ وَمِلْأَ الْاَرْضِ
وَمِلْأَ مَا شِئْتَ مِنْ شَيْءٍ بَعْدُ

**"றப்பனா லகல்ஹம்து மில்அஸ்ஸமாவாத்தி, வமில்அல்அர்ழி வமில்அ மாஷிஃத மின்ஷைஇன் பஃது"**

**இதன் பொருள்:-** எங்கள் போஷகனே! உனக்கே எல்லாப் புகழும் உரித்து. வானங்கள், பூமி நிறையவும், நீநாடிய இதர பொருட்கள் நிறையவுமுள்ள புகழ்யாவும் உனக்கே உரித்து என்று கூறிவிட்டு,

அல்லாஹுஅக்பர் எனக் கூறி ஸுஜூது செய்வதற்காக 6ம் படத்திலுள்ளதுபோல் பூமியில் பணியவேண்டும்.



படம் 6

இவ்வாறு ஸுஜூதிலிருக்கும் சமயத்தில்,

سُبْحَانَ رَبِّيَ الْاَعْلٰى وَبِحَمْدِهٖ

**"ஸுப்ஹான ரப்பியல் அஃலா வபிஹம்திஹி"**

**இதன் பொருள்:-** எனது உயர்வான நாயனைப் புகழ்ந்து துதிக்கிறேன். என்று மூன்றுமுறை கூறியபின் "அல்லாஹு அக்பர்" எனக் கூறியவாறு கஃதா எனப்படும் சிறு இருப்புக்கு 7ம் படத்திலுள்ளதுபோல் அமர வேண்டும்.

இவ்வாறு சிறுஇருப்பில் இருக்கும் போது பின்வருமாறு கூறவேண்டும்.



படம் 7

رَبِّ اغْفِرْ لِيْ وَارْحَمْنِيْ وَاجْبُرْنِيْ وَارْفَعْنِيْ
وَارْزُقْنِيْ وَاهْدِنِيْ وَعَافِنِيْ وَاعْفُ عَنِّيْ

**ரப்பிஃபிர்லீ வர்ஹம்னீ வஜ்புர்னீ வர்பஃனீ வர்சுக்னீ வஹ்தினீ வஆபினீ வஃபுஅன்னீ**

இதன் பொருள்:- என் நாயனே! என்பாவங்களை மன்னித்தருள்வாயாக! எனக்கு அருள்பாலிப்பாயாக! எனது முறிவுகளைப் பொருத்துவாயாக. என்னை உயர்வுபடுத்துவாயாக! எனக்கு உணவளிப்பாயாக. என்னை நேரான வழியில் நடத்துவாயாக. எனக்கு சரீரசுகத்தைத் தந்தருள்வாயாக எனதுபாவங்களை அழித்து என்னை மன்னிப்பாயாக"

என்று கூறிவிட்டு மறுபடியும் அல்லாஹு அக்பர் எனக் கூறியவண்ணம் ஸுஜூதுக்கு (6ம் படத்தில் காட்டியது போல்) பணியவேண்டும். அதிலும் மேலே கூறப்பட்ட,

سُبْحَانَ رَبِّيَ الْاَعْلٰى وَبِحَمْدِهٖ

**"ஸுப்ஹான ரப்பியல் அஃலா வபிஹம்திஹி"** என மூன்று முறை கூறி அல்லாஹு அக்பர் எனக் கூறியவண்ணம் (7ம் படத்தில் உள்ளதுபோல்) சிறு இருப்புக்கு வந்து, இருப்பில் இருந்து அதில் தாமதிக்காமல் இரண்டாம் ரக் அத்திற்கு

எழுந்து நிற்கவேண்டும்.

இவ்வாறே இரண்டாம் ரக்அத்தையும் தொழுது முடித்துவிட்டு, இரண்டாம் ரக்அத்தின் இரண்டாம்ஸுஜூதுக்குப் பின் (8ம் படத்தில் காட்டப்பட்டதுபோல்) அமர்ந்து, அதாவது வலதுகால் விரல்களை நாட்டிவைத்து சவணத்தின் மீது அமர்ந்து அத்தஹிய்யாத்தை ஓதவேண்டும்.



படம் 8

اَلتَّحِيَّاتُ الْمُبَارَكَاتُ الصَّلَوَاتُ الطَّيِّبَاتُ لِلّٰهِ

اَلسَّلَامُ عَلَيْكَ اَيُّهَا النَّبِيُّ وَرَحْمَةُ اللّٰهِ وَبَرَكَاتُهُ

اَلسَّلَامُ عَلَيْنَا وَعَلٰى عِبَادِ اللّٰهِ الصَّالِحِيْنَ اَشْهَدُ

اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا رَّسُوْلُ اللّٰهِ

اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ

அத்தஹிய்யாதுல் முபாறகாதுஸ் ஸலவாத்துத் தையிபாத்து லில்லாஹி அஸ்ஸலாமு அலேக்க அய்யுஹன்னபிய்யு வரஹ்மதுல் லாஹி வபரகாதுஹு அஸ்ஸலாமு அலேனு வஅலா இபாதில்லாஹிஸ் ஸாலிஹீன் அஷ்ஹது அன்லாயிலாஹ இல்லல்லாஹு வஅஷ்ஹது அன்னமுகம்மதற் றசூலுல்லாஹி அல்லாஹும்ம ஸல்லி அலா முகம்மதின்.

இதன் பொருள்:- தூய்மை பொருந்திய வணக்கங்களும் பொலிவுள்ள காணிக்கைகளும் அல்லாஹுத் தஆலாவுக்கே உரித்து. நபியே! தங்கள் மீது அல்லாஹ்றவின் சாந்தியும் அவனது அருளும், பொலிவும் உண்டாவதாக. எங்கள் மீதும் இதர சாலிஹான நல் அமல்புரியக்கூடிய அல்லாஹ்றவின் நல்லடியார்கள்மீதும் சாந்தி உண்டாவதாக. வணக்கத்துக்குரிய நாயன் அல்லாஹ்றவைத் தவிர வேறு யாருமில்லை என

நான் சாட்சிகூறுகிறேன். மேலும் முகம்மது (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதரென்றும் நான் நிச்சயமாகச் சாட்சி கூறுகிறேன். முகம்மது (ஸல்) அவர்கள்மீது உன் கருணுமாரியாகிய ஸலவாத்தைக் கூறுவாயாக இறைவா!

குறிப்பு:- அத்தஹிய்யாத்து ஓதும்போது "அஷ்ஹது அன்லாயிலாஹ இல்லல்லாஹு" என்று ஓதுகின்றநேரம் வலதுகையின் கலிமா விரலுடன் அதன் பக்கத்துவிரலை (பெருவிரலை) துணையாகச்சேர்த்து வைத்துக்கொண்டு கலிமாவிரலைமட்டும் உயர்த்தி நீட்டியவண்ணம் பிடித்திருக்கவேண்டும்.

மேற்கூறியவாறு 'முகம்மதின்' வரை அத்தஹிய்யாத்து ஓதிமுடிந்த பிறகு மூன்றும் ரக்அத்துக்காக அல்லஹு அக்பர் எனக் கூறியவண்ணம் எழுந்து நிலைக்கு வரவேண்டும் மூன்று அல்லது நான்கு ரக்அத் தொழுகையாயின், பிந்திய இரண்டு ரக்அத்துக்களையும், முந்திய இரண்டு ரக்அத்துக்கள் போன்றே தொழ வேண்டும். ஆனுல் பிந்திய இரு ரக்அத்துக்களில் அல்ஹம்து சூரு (சூறத்துல் பாத்திஹா) மட்டும் ஓதவேண்டும். அத்துடன் வேறு சூருக்கள் ஓதவேண்டிய அவசியமில்லை.

இவ்வாறு நிறைவேற்றிய தொழுகையின் கடைசி ரக்அத்தில் (அதாவது; 4வது அல்லது 3வது அல்லது 2வது ரக்அத்தில்) இரண்டுஸஜ்தாக்களும் (ஸுஜூதுகள் முடிந்தபின்)



படம் 9



படம் 10

(9ம் 10ம் படங்களில் இருப்பது போன்ற) 'கஃதா' இருப்பில் அமரவேண்டும். அதாவது, சவணத்தைத் தரையில் வைத்து; இடதுகாலை வலதுகாலின் கீழே வெளியில் பாதம் தெரியுமாறு படுக்கவைத்து வலதுகாலின் விரல்களை நாட்டி வைத்து அமர்வதாகும்.

முன் கூறப்பட்ட அத்தஹிய்யாத்துடன் கீழ் வருகின்ற ஸலவாத்தையும் சேர்த்து ஓதவேண்டும்.

وَعَلٰى آلِ مُحَمَّدٍ
كَمَا صَلَّيْتَ عَلٰى اِبْرَاهِيْمَ وَعَلٰى آلِ اِبْرَاهِيْمَ
وَبَارِكْ عَلٰى مُحَمَّدٍ وَعَلٰى آلِ مُحَمَّدٍ كَمَا بَارَكْتَ
عَلٰى اِبْرَاهِيْمَ وَعَلٰى آلِ اِبْرَاهِيْمَ اِنَّكَ حَمِيْدٌ مَّجِيْدٌ

'வஅலா ஆலிமுகம்மதின் கமாஸல்லைத்த அலா இப்றுஹீம வஅலா ஆலிஇப்றுஹீம வபாரிக் அலாமுகம்மதின் வஅலா ஆலி முகம்மதின் கமாபாறக்த அலா இப்றுஹீம வஅலா ஆலிஇப்றுஹீம இன்னக ஹமீதும் மஜீத்''


இதன் பொருள்:- முகம்மது (ஸல்) அவர்களின் குடும்பத்தார் மீதும் உன் கருணை பொருந்திய ஸலவாத்தை வருஷித்தருள். நபி இபறுஹீம் (அலை) அவர்கள் மீதும் அன்னாரின் குடும்பத்தார் மீதும் உன் கருணைமாரியாகிய ஸலவாத்தை வருஷித்த பிரகாரமே வருஷிப்பாயாக. மேலும் முகம்மது (ஸல்) அவர்களுக்கும் அன்னாரின் குடும்பத்தார்களுக்கும் நீ பொலிவையும் பறக்கத்தையும் அருளச்செய்வாயாக. நபி இப்றுஹீம் (அலை) அவர்களுக்கும் அன்னாரின் குடும்பத்தார்களுக்கும் பொலிவையும் பறக்கத்தையும் நீ அருளிய பிரகாரமே அருள்புரிவாயாக. நிச்சயமாக நீ புகழப்படுவோனும், கொடைவள்ளலுமாவாய்.

மேற்கூறியவாறு அத்தஹிய்யாத்தை கடைசிவரை ஓதி முடித்தபிறகு, வலது பக்கம் முகத்தைத் திருப்பி,

اَلسَّلَامُ عَلَيْكُمْ وَرَحْمَةُ اللّٰهِ

அஸ்ஸலாமுஅலைக்கும் வரஹ்மத்துல்லாஹ்

என்று 11ம் படத்திலுள்ளதுபோல் சலாம் கூறவேண்டும்.



படம் 11

இதன் பொருள்:- உங்கள்மீது சாந்தியும், அல்லாஹ்வுடைய அருளும் உண்டாவதாக.



படம் 12

இவ்வாறே இடதுபக்கம் முகத்தை திருப்பி,

அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹ்,

என்று 12வது படத்திலுள்ளவாறு முன்போல் சலாம்கூறவேண்டும்.

இவ்வாறு ஸலாம் கூறியவுடன் குறிப்பிட்ட தொழுகை முடிவடைந்து விடுகிறது.

குறிப்பு:- அத்தஹிய்யாத்தில் வேறு சில துஆக்களையும் நபி நாயகம் (ஸல்) அவர்கள் ஓதியுள்ளார்கள். அவற்றையும் சேர்த்து ஓதித் தொழ விரும்புவோர் அதனையும் சேர்த்துக் கொள்ளுதல் மிகச் சிறந்ததாகும்.

اَللّٰهُمَّ اغْفِرْلِيْ مَاقَدَّمْتُ وَمَا
اَخَّرْتُ وَمَا اَسْرَرْتُ وَمَا اَعْلَنْتُ وَمَا اَسْرَفْتُ وَمَا
اَنْتَ اَعْلَمُ بِهِ مِنِّيْ اَنْتَ الْمُقَدِّمُ وَاَنْتَ الْمُؤَخِّرُ
لَا اِلٰهَ اِلَّا اَنْتَ سُبْحَانَكَ اِنِّيْ كُنْتُ مِنَ الظَّالِمِيْنَ

அல்லாஹும்மஃபிர்லீ மாகத்தம்து வமா அஹ்றர்த்து வமா அஸ்றர்த்து வமா அஃலன்து வமா அஷ்றப்து வமாஅன்த அஃலமு பிஹி மின்னீ அன்தல் முகத்திமு வஅன்தல் முஅஹ்ஹிறு லாஇலாஹ இல்லாஅன்த சுப்ஹானக்க இன்னீ குன்து மினழ் ழாலிமீன்.

இதன் பொருள்:- இறைவா! நா முன் செய்தனவும் பின் செய்தனவும், இரகசியமாகச் செய்தன்வும், பரகசியமாகச் செய்தனவும், நான் கடப்பாகச் செய்தவையுமாகிய சகல பாவங்களையும் என்னைவிட நீயே மிகவும் அறிந்தவனானபடியால் அவை அத்தனையையும் நீ மன்னித்தருள், நீயே முற்படுத்துவோனும் நீயே பிற்படுத்து வோனுமாய், இருக்கிறாய் உன்னைத்தவிர வணக்கத்துக்குரிய நாயகன் யாருமில்லை. நீ மிக்க தூயவன் நானோ பாவிகளில் நின்றுமுள்ளவனாக இருக்கிறேன்

اَللّٰهُمَّ اِنِّيْ اَعُوْذُ بِكَ مِنْ عَذَابِ الْقَبْرِ وَمِنْ
عَذَابِ النَّارِ وَمِنْ فِتْنَةِ الْمَحْيَا وَالْمَمَاتِ وَمِنْ
فِتْنَةِ الْمَسِيْحِ الدَّجَّالِ

அல்லாஹும்ம இன்னீ அஊதுபிக்க மின்அதாபி ஜஹன்னம வமின்அதாபில்கப்றி வமின் பித்னத்தில் மஹ்யா வல்மமாதி வமின்சர்றில் மஸீஹித்தஜ்ஜால்.

இதன் பொருள்:- இறைவா! நரகத்தின் வேதனையையும் என் சீவியததில் ஏற்படும் குழப்படிகளையும் என் மரண வேளையில் நிகழும் குழப்படிகளையும் மஸீஹ் தஜ்ஜாலின் குழப்படிகளையும் விட்டும் நான் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன்.

اَللّٰهُمَّ اِنِّيْ ظَلَمْتُ نَفْسِيْ ظُلْمًا كَثِيْرًا كَبِيْرًا
وَلَا يَغْفِرُ الذُّنُوْبَ اِلَّا اَنْتَ فَاغْفِرْلِيْ
مَغْفِرَةً مِّنْ عِنْدِكَ وَارْحَمْنِيْ اِنَّكَ
اَنْتَ الْغَفُوْرُ الرَّحِيْمُ

அல்லாஹும்ம இன்னீ ழலம்து நப்ஸீ ழுல்மன் கதீறன் கபீறன் வலாயஃபிறுத் துனூப இல்லாஅன்த பஃபிர்லீ மஃபிறதன் மின் இன்திக வர்ஹம்னீ இன்னக அன்தல் கபூறுர் றஹீம்.

இதன் பொருள்:- இறைவா! நான் எனக்கே பல அநீதிகளையும் மாபெரும் தீங்குகளையும் புரிந்துவிட்டேன். ஆகவே என் குற்றங்களையும் உன் நல்லருளால் மன்னித்துவிடு. மேலும் நீ எனக்கு அருள்புரி. ஏனெனில் நிச்சயமாக நீயே பிழை பொறுத்துக் கிருபை செய்யக் கூடியவன்".

### 60. தொழுகைக்குப் பின்

ஸலாம்கூறி தொழுகை முடிந்தவுடன் பின்வருவனவற்றை ஓதுதல் வேண்டும்.

اَسْتَغْفِرُ اللّٰهَ ③ اَللّٰهُمَّ اَنْتَ السَّلَامُ
وَمِنْكَ السَّلَامُ تَبَارَكْتَ يَا ذَا الْجَلَالِ
وَالْاِكْرَامِ

அஸ்தஃபிறுல்லாஹ். அஸ்தஃபிறுல்லாஹ். அஸ்தஃபிறுல் லாஹ். அல்லாஹும்ம அன்தஸ்ஸலாம் வமின்கஸ்ஸலாம் தபா றக்த யாதல் ஜலாலி வல்இக்றும்.

இதன் பொருள்:- அல்லாஹ்விடம் பிழை பொறுக்கத் தேடுகிறேன். இறைவா! நீயே சாந்திமயமானவன், சாந்தி உன்னில் நின்றேயாகும். மகத்துவமும் கண்ணியமும் பொருந்தியவனே! நீ பாக்கியமடைந்துவிட்டாய்.

என்று ஓதியபின்

قُلْ هُوَ اللّٰهُ اَحَدٌ ○ قُلْ اَعُوْذُ بِرَبِّ الْفَلَقِ ○
قُلْ اَعُوْذُ بِرَبِّ النَّاسِ ○

ஆயத்துல் குர்ஸியையும், குல்ஹுவல்லாஹு அஹத் குல்அஊது பிறப்பில் பலக், குல்அஊது பிறப்பின்னாஸ் ஆகிய சூறுக்களையும் ஓதி அதன் பிறகு,

سُبْحَانَ اللّٰهِ، اَلْحَمْدُ لِلّٰهِ، اَللّٰهُ اَكْبَرُ،

சுப்ஹானல்லாஹ். அல்ஹம்துலில்லாஹ். அல்லாஹு அக்பர். ஒவ்வொன்றையும் 33 தடவைகள் கூறியபின் துஆ ஓதவேண்டும்.

## 61. ஐங்காலத் தொழுகையின் பொதுவான துஆ

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ حَمْدًا يُّوَافِيْ نِعَمَهٗ
وَيُكَافِئُ مَزِيْدَهٗ اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ وَّعَلٰى
اٰلِ مُحَمَّدٍ اَللّٰهُمَّ اغْفِرْ لِيْ ذُنُوْبِيْ وَخَطَايَايَ

كُلَّهَا اَللّٰهُمَّ انْعَشْنِيْ وَاجْبُرْنِيْ وَاهْدِنِيْ لِصَا
لِحِ الْاَعْمَالِ وَالْاَخْلَاقِ اِنَّهُ لَايَهْدِيْ لِصَالِحِهَا
وَلَايَصْرِفُ سَيِّئَهَا اِلَّا اَنْتَ وَصَلَّى اللّٰهُ
وَسَلَّمَ عَلٰى سَيِّدِنَا مُحَمَّدٍ وَّ اٰلِهٖ وَّ
صَحْبِهٖ اَجْمَعِيْنَ وَالْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○

அல்ஹம்துலில்லாஹி றப்பில்ஆலமீன் ஹம்தன் யுவாபீ நிஃமஹு வயுகாபிஉ மஸீதஹ் அல்லாஹும்ம ஸல்லிஅலா முஹம்மதின் வஅலா ஆலிமுஹம்மத் அல்லாஹும்மஃபிர்லீ துனூபீ வஹதாயாய குல்லஹா அல்லாஹும் மன்அஸ்னீ வஜ்புர்னீ வஹ்தினீ லிசாலிஹில் அஃமாலி வல்அஹ்லாக்கி இன்னஹு லாயஹ்தீ லிசாலிஹிஹா வலாயஸ்ரிபு செய்யிஅஹா இல்லாஅன்த வசல்லல்லாஹு வசஸ்லம அலா செய்யிதினா முகம்மதின் .வஆலிஹி வசஹ்பிஹி அஜ்மஈன் வல்ஹம்துலில்லாஹி றப்பில் ஆலமீன்.

## 62. ஸுப்ஹு தொழுகையின் துஆ

① صُبْحَيْ دُعَا ①

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ
وَعَلٰى اٰلِ مُحَمَّدٍ اَللّٰهُمَّ اجْعَلْ صَبَاحَنَا صَبَاحَ
الصَّالِحِيْنَ وَمَسَاءَنَا مَسَاءَ الذَّاكِرِيْنَ وَقُلُوْبَنَا
قُلُوْبَ الْخَاشِعِيْنَ وَاَبْدَانَنَا اَبْدَانَ الْمُطِيْعِيْنَ
وَاَعْمَالَنَا اَعْمَالَ الْمُتَّقِيْنَ وَاَلْسِنَتَنَا اَلْسِنَةَ

الذّاكِرِيْنَ وَنَبِّهْنَا عَنْ نَوْمَةِ الْغَافِلِيْنَ وَ
شَارِكْنَا فِيْ دُعَاءِ الصَّالِحِيْنَ وَارْزُقْنَا
الْجَنَّةَ يَا رَبَّ الْعٰلَمِيْنَ وَصَلَّى اللّٰهُ وَسَلَّمَ
عَلٰى سَيِّدِنَا مُحَمَّدٍ وَّاٰلِهٖ وَصَحْبِهٖ اَجْمَعِيْنَ
وَالْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ ○

''அல்ஹம்துலில்லாஹி றப்பில் ஆலமீன் அல்லாஹும்ம ஸல்லிஅலா முகம்மதின் வஅலா ஆலிமுகம்மதின் அல்லாஹும் மஜ்அல் ஸபாஹனு ஸபாஹஸ் ஸாலிஹீன் வமசாஅனு மசாஅத் தாக்கிரீன் வகுலுபனு குலூபல் ஹாசியீன வஅப்தானனு அப்தானல் முதீயின் வஅஃமாலனு அஃமாலல் முத்தகீன் வஅல்சினதனு அல்சினதத் தாகிரீன் வனப்பிஹ்னு அன்நவ்மதில்ஆபிலீன் வசாறிக்னு பீதுஆஇஸ் ஸாலிஹீன் வர்சுக்னல் ஜன்னத்த யாறப்பல் ஆலமீன் வசல்லல்லாஹு வசல்லமஅலா செய்யிதினு முகம்மதின் வஆலிஹி வசஹ்பிஹிஅஜ்மயீன் வல்ஹம்துலில்லாஹி றப்பில் ஆலமீன்.

## 63. ழுஹர் தொழுகையின் துஆ

(٢) ظُهْرُ دِيْ دُعَا (٢)

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۔ اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ
وَّعَلٰى اٰلِ مُحَمَّدٍ ۔ اَللّٰهُمَّ اكْتُبْ لِكُلِّ وَاحِدَةٍ مِّنَّا بَرَاءَةً
مِّنَ النَّارِ وَ اَمَانًا مِّنَ الْعَذَابِ وَخَلَاصًا مِّنَ الْحِسَابِ
وَّجَوَازًا عَلَى الصِّرَاطِ وَنَصِيْبًا مِّنَ الْجَنَّةِ وَنَجَاةً
مِّنَ النَّارِ وَالْعَفْوَ عِنْدَ الْحِسَابِ اَللّٰهُمَّ اَحْسِنْ عَاقِبَتَنَا

فِى الْاُمُوْرِ كُلِّهَا وَ اَجِرْنَا مِنْ خِزْيِ الدُّنْيَا وَعَذَابِ الْاٰخِرَةِ ، تَوَفَّنَا مُسْلِمِيْنَ ، وَاَلْحِقْنَا بِالصَّالِحِيْنَ ، وَصَلَّى اللّٰهُ وَسَلَّمَ عَلٰى سَيِّدِنَا مُحَمَّدٍ وَّ اٰلِهٖ وَصَحْبِهٖ اَجْمَعِيْنَ ، وَالْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○

''அல்ஹம்துலில்லா**ஹி றப்பில்** ஆலமீன் அல்லாஹு‍ம்ம ஸல்லிஅலா முகம்மதின் **வ**அலா ஆலிமுகம்மதின் அல்லா ஹு‍ம்மக்துப் லிகுல்லி வாகிததின் மின்னபருஅதன் மினன் ஞரி வஅமானன் மினல்அதாபி வகலாசன் மினல்கிசாப் வஜ வாசன் அலாசிருத்தி வனசிபன் மினல்ஜன்னத்தி வனஜா தன் மினன்ஞரி வல்அப்வா இன்தல் ஹிசாப் அல்லாஹு‍ம் ம அஹ்சின் ஆகிபதஞ பில்உமூறி குல்லிஹா வஅஜிர்ஞமின் கிஸ்யித்துன்யா வஅதாபில் ஆஹிறதி தவப்பஞ முஸ்லிமீன் வஅல்ஹிக்ஞ பிஸ்சாலிஹீன் வஸல்லல்லாஹு வஸல்லம அலாசெய்யிதிஞ முகம்மதின் வஆலிஹி வசஹ்பிஹி அஜ்ம ஈன் வல்ஹம்துலில்லாஹி றப்பில்ஆலமீன்.

### 64. அஸர் தொழுகையின் துஆ

عَصْرُ دِيَ دُعَا ③

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ، اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ وَعَلٰى اٰلِ مُحَمَّدٍ . اَللّٰهُمَّ اِنَّا نَسْئَلُكَ سَلَامَةً فِى الدِّيْنِ وَالدُّنْيَا وَعَافِيَةً فِى الْجَسَدِ وَ زِيَادَةً فِى الْعِلْمِ وَالْهُدٰى وَبَرَكَةً فِى الرِّزْقِ وَصِحَّةً فِى الْعَقْلِ وَتَوْبَةً قَبْلَ الْمَوْتِ وَرَاحَةً عِنْدَ الْمَوْتِ وَ مَغْفِرَةً بَعْدَ الْمَوْتِ ، يَاسَامِعَ كُلِّ صَوْتٍ هَوِّنْ عَلَيْنَا سَكَرَاتِ

الْمَوْتِ وَصَلَّى اللّٰهُ وَسَلَّمَ عَلٰى سَيِّدِنَا مُحَمَّدٍ
وَاٰلِهٖ وَصَحْبِهٖ اَجْمَعِيْنَ، وَالْحَمْدُ لِلّٰهِ
رَبِّ الْعٰلَمِيْنَ ○

''அல்ஹம்துலில்லாஹி றப்பில்ஆலமீன் அல்லாஹும்ம ஸல்லிஅலா முகம்மதின் வஅலா ஆலிமுகம்மதின் அல்லாஹும்ம இன்னு நஸ்அலுக்க ஸலாமதன் பித்தீனி வத்துன்யா வஆபியதன்பில்ஜசதி வசியாததன்பில்இல்மி வல்ஹூதா வபறகதன் பிர்றிஸ்கி வசிஹ்ஹதன் பில்அக்லி வதவ்பதன் கப்லல் மவ்தி வருகதன் இன்தல் மவ்தி வமஃபிறதன் பஃதல்மவ்தியாஸாமிஅ குல்லிசவ்தின் ஹவ்வின்அலைனு சக்றுதில் மவ்த் வசல்லல்லாஹு வசல்லம அலாசெய்யிதினு முகம்மதின் வஆலிஹி வசஹ்பிஹி அஜ்மயீன் வல்ஹம்துலில்லாஹி றப்பில்ஆலமீன்.

## 65. மஃரிப் தொழுகையின் துஆ

(٤) مَغْرِبْ بَدَيْ دُعَا (4)

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ. اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ
وَعَلٰى اٰلِ مُحَمَّدٍ اَللّٰهُمَّ اِنَّا اَمْسَيْنَا مِنْكَ فِيْ
نِعْمَةٍ وَّعَافِيَةٍ وَّسِتْرٍ فَاَتِمَّ نِعْمَتَكَ عَلَيْنَا
وَعَافِيَتَكَ وَسِتْرَكَ فِي الدِّيْنِ وَالدُّنْيَا وَالْاٰخِرَةِ
اِنَّكَ عَلٰى كُلِّ شَيْءٍ قَدِيْرٌ، وَبِالْاِجَابَةِ جَدِيْرٌ،
نِعْمَ الْمَوْلٰى وَنِعْمَ النَّصِيْرُ اَللّٰهُمَّ اَجِرْنَا مِنَ
النَّارِ (7) اَللّٰهُمَّ اَجِرْنَا مِنَ النَّارِ سَالِمِيْنَ، وَ

اَدْخِلْنَا الْجَنَّةَ بِسَلَامٍ آمِنِيْنَ وَقِنَا رَبَّنَا
شَرَّ الظَّالِمِيْنَ فَانْصُرْنَا عَلَى الْقَوْمِ الْكَافِرِيْنَ
اِلٰهَنَا وَارْزُقْنَا النَّظَرَ اِلٰى لِقَآءِ وَجْهِكَ الْكَرِيْمِ
مَعَ لِقَآءِ سَيِّدِنَا مُحَمَّدٍ وَصَلَّى اللّٰهُ وَسَلَّمَ عَلٰى
سَيِّدِنَا مُحَمَّدٍ وَّ اٰلِهٖ وَصَحْبِهٖ اَجْمَعِيْنَ
وَالْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○

''அல்ஹம்துலில்லாஹி றப்பில் ஆலமீன் அல்லாஹும்ம ஸல்லிஅலா முகம்மதின் வஅலா ஆலிமுகம்மதின் அல்லாஹும்ம இன்னஅம்சைன மின்க பிநிஃமதின் வஆபியதின் பஅதிம் நிஃமதக அலைய்னா வஆபியதக வசித்றக்க பித்தீனி வத்துன்யா வல்ஆகிறதி இன்னக அலாகுல்லிசையின் கதீர் வபில்இஜாபதி ஜதீத் நிஃமல் மவ்லா வநிஃமன் நசீறு அல்லாஹும்ம அஜிர்னா மினன்னார் (7 தரம்) அல்லாஹும்ம அஜிர்னா மினன்னாரி ஸாலிமீன் வஅத்கில்னல் ஜன்னத்த பிஸலாமின் ஆமினீன் வகினா றப்பனா சர்றழ்ழாலிமீன் பன்சுர்னா அலல் கவ்மில்காபிரீன் இலாஹனா வர்சுக்னன் னழ்ற இலாலிகாயி வஜ்ஹிகல் கரீம் மஅலிகாயி சையிதினா முகம்மதின் வஸல்லல்லாஹு வசல்லமஅலா சையிதினா முகம்மதின் வஆலிஹி வசஹ்பிஹி அஜ்மஈன் வல்ஹம்துலில்லாஹி றப்பில் ஆலமீன்.''

## 66. இஷா தொழுகையின் துஆ

(٥) عِشَاءِ دِيْ دُعَا (5)

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ. اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ
وَّعَلٰى اٰلِ مُحَمَّدٍ اَللّٰهُمَّ احْفَظْنَا فِيْ ظُلْمَةِ اللَّيْلِ

كَمَا حَفِظْتَنَا يَا رَبَّنَا فِيْ ضَوْءِ النَّهَارِ وَاصْرِفْ
عَنَّا بَلَآءَ اللَّيْلِ كَمَا صَرَفْتَ عَنَّا بَلَآءَ النَّهَارِ
وَاحْشُرْنَا مَعَ الْاَبْرَارِ وَاجْعَلْ مُنْقَلَبَنَا اِلٰى
دَارِ الْقَرَارِ وَنَجِّنَا مِنَ النَّارِ وَاعْفُ عَنَّا الْاَوْزَارَ
يَا غَفَّارُ اَللّٰهُمَّ احْفَظْنَا يَا فَيَّاضُ مِنْ جَمِيْعِ
الْبَلَايَا وَالْاَعْدَآءِ وَالْاَمْرَاضِ بِرَحْمَتِكَ يَا
اَرْحَمَ الرَّاحِمِيْنَ وَصَلَّى اللّٰهُ وَسَلَّمَ عَلٰى
سَيِّدِنَا مُحَمَّدٍ وَّاٰلِهٖ وَصَحْبِهٖ اَجْمَعِيْنَ
وَالْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○

"அல்ஹம்துலில்லாஹி றப்பில்ஆலமீன் அல்லாஹும்ம சல்லிஅலா முகம்மதின் வஅலா ஆலிமுகம்மதின் அல்லாஹும்ம மஹ்பழ்ணா பீலும்மதில்லைலி கமா கபிழ்தணா யாறப்பணா பீழூவ்இன்னகாரி வஸ்றிப் அன்ணாபலா அல்லைலி கமாசறப்த அன்ணாபலா அன்னகாரி வஹ்சுர்ணா மஅல்அப்றாறி வஜ்அல் முன்கலபணா இலாதாறில்கறாறி வனஜ்ஜிணாமினன்னாறி வஃபு அன்னல்அவ்சாற யாகப்பாறு அல்லாஹும்மஹ்பழ்ணா யா பய்யாழு மின்ஜமீஇல் பலாயா வல்அஃதாஇ வல்அம்றாழி பிறஹ்மதிக யாஅர்கமர்றாஹிமீன வஸல்லல்லாஹு வஸல்லம அலாசெய்யிதிணா முகம்மதின் வஆலிஹி வசஹ்பிஹி அஜ்மஈன் வல்ஹம்துலில்லாஹி றப்பில் ஆலமீன்.

## 67. ஸுப்ஹு தொழுகையில் குனூத் ஓதுதல்

ஸுப்ஹு தொழுகையுடைய கடைசி ரக்அத்தில் (இரண்டாம் ரக்அத்தில்) ருக்கூவிலிருந்து நிலைக்கு வந்தவுடன், இரு

கைகளையும் ஏந்திய வண்ணம் (படம் 13ல் காட்டியவாறு நின்றுகொண்டு குனூத்தை ஓதவேண்டும்.

குறிப்பு:- றம்ழான் மாதத்தில் பிறை 16 இரவு முதல் நோன்புமுடியும் வரை; வித்ரு தொழுகையின் போது ஸுப்ஹு தொழுகை போன்றே குனூத் ஓதிக் கொள்ளல் வேண்டும்.



படம் 13

## 68. குனூத் ஓதுதல்

اَللّٰهُمَّ اهْدِنِيْ فِيْمَنْ هَدَيْتَ وَعَافِنِيْ فِيْمَنْ عَافَيْتَ
وَتَوَلَّنِيْ فِيْمَنْ تَوَلَّيْتَ وَبَارِكْ لِيْ مِنَ الْخَيْرِ فِيْمَا
اَعْطَيْتَ وَقِنِيْ شَرَّ مَا قَضَيْتَ فَاِنَّكَ تَقْضِيْ وَلَا
يُقْضٰى عَلَيْكَ فَاِنَّهُ لَا يَذِلُّ مَنْ وَالَيْتَ وَلَا يَعِزُّ
مَنْ عَادَيْتَ تَبَارَكْتَ رَبَّنَا وَتَعَالَيْتَ فَلَكَ الْحَمْدُ،
عَلٰى مَا قَضَيْتَ اَسْتَغْفِرُكَ وَاَتُوْبُ اِلَيْكَ وَصَلَّى اللّٰهُ
عَلٰى سَيِّدِنَا مُحَمَّدِ نِالنَّبِيِّ الْاُمِّيِّ وَعَلٰى اٰلِهٖ وَصَحْبِهٖ
وَسَلَّمْ

"அல்லாஹுஹும்மஹ்தினீ பீமன்ஹதைத்த, வஆபினீ பீமன்ஆபைத்த, வத்தவல்லனீ பீமன்தவல்லேத்த, வபாரிக்லீ மினஃல்கைரி பீமா அஃதைத்த, வகினீ ஷர்ரமா கழைத்த, பஇன்னகதக்ழீ வலாயுக்ழாஅலைக்க பஇன்னஹுஹுலாயதில்லு மன்வாலேத்த வலாயயிஸ்ஸு மன்ஆதைத்த தபாறக்த றப்பனு வதஆலைத்த பலகல்ஹம்து அலாமா கழைத்த அஸ்தஃபிறுக்க வஅதூபுஇலைக்க, வஸல்லல்லாஹு அலாசெய்யிதினு முகம்மதினின் நபிய்யில் உம்மிய்யி வஅலாஆலிஹி வஸஹ்பிஹி வஸல்லம்.

இதன் பொருள்:- நீ நேர்வழிகாட்டியவர்களில் எனக்கும் நேர்வழிகாட்டு; நீ நற்சுகம் அருளியவர்களில் எனக்கும் நற்சுகம் அருள். நீ தலைவனாக இருந்து காரியத்தனம் புரிந்தவர்களில் எனக்கும் காரியகர்த்தனாக இரு. நீ அருளியநலவானவைகளில் பொலிவையும் பறக்கத்தையும் செய்தருள். என்றப்பே! உனதுதீர்ப்பில் தீயவற்றைவிட்டும் என்னைக்காப்பாற்றியருள்; ஏனெனில் நீதான் கற்பனை செய்பவன் உன் மீது யாரும் கற்பிக்க முடியாது. நீ காரியஸ்தனாக இருப்பவன் எவனும் இழிவடையமாட்டான். நீயே பாக்கியமுள்ளவன். எங்கள் றப்பே! மேலும் உயர்வானவனும் நீயே. நீ கற்பித்த கற்பனையின்மீது உனக்கே புகழ்.

உன்னிடம் பாவமன்னிப்பும், பாவவிமோசனமும் தேடுகிறேன். எங்கள் மகான் முகம்மது (ஸல்) மீதும், அன்னாரின் கிளையார் தோழர்கள் மீதும் உன் கருணைமாரியாகிய ஸலவாத்தையும் (நல்லாசியையும்) சாந்தியையும் அல்லாஹுத்தஆலா சதா வருஷிப்பானாக!

## 69. வித்ருத் தொழுகை

'வித்ரு' என்பது ஒற்றைஎன்ற பொருளாகும். இதுசுன்னத்தான தொழுகைகளில் பிரதானமானதாகும் இஷா தொழுகைக்குப்பின்னரே இதைத்தொழவேண்டும். இஷாத் தொழுகைக்குரிய நேரம் முடியும்வரை இத்தொழுகையை நிறைவேற்றலாம். (அதாவது கிழக்குத் திசையில் உண்மையான வெண்மைதோன்றும் வரையிலாகும்.) இத் தொழுகை கூடுதலாக 11 ரக்அத்துக்களும் குறைந்தது 3 ரக்அத்துக்களும் அதிலும் குறைவாக 1 ரக்அத்தும், என்ற பிரகா

ரம் நிறைவேற்றலாம். ஆனால் இவ்விரண்டு ரக்அத்துக்களாகவே தொழுது ஸலாம் கொடுக்வேண்டும். கடைசியான ஒரு ரக்அத்தை மட்டும் தனியாக ஒரு ஸலாமைக்கொண்டு தொழ வேண்டும்.

## 70. வித்ருத் தொழுகையின் துஆ

اَللّٰهُمَّ تَقَبَّلْ مِنَّا صَلَاتَنَا وَصِيَامَنَا وَقِيَامَنَا وَرُكُوْعَنَا وَسُجُوْدَنَا وَتَضَرُّعَنَا وَتَخَشُّعَنَا وَتَمِّمْ تَقْصِيْرَ اَعْمَالِنَا وَتَجَاوَزْعَنَّا سَيِّآتِنَا وَتَوَفَّنَا مَعَ الْاَبْرَارِ بِرَحْمَتِكَ يَا اَرْحَمَ الرَّاحِمِيْنَ

"அல்லாஹும்ம தகப்பல்மின்னா ஸலாத்தனா வஸியாமனா வகியாமனா வருகூஅனா வசுஜூதனா வத்தழர்ருஅனா வத்தகஷ்ஷுஅனா வதம்மிம் தக்ஸீர அஃமாலினா வத ஜாவஸ் அன்னா செய்யிஆத்தினா வத்தவப்பனா மஅல்அப்ரார். பிறஹ்மதிக யாஅர்ஹமர் ர்ராஹிமீன்."

**இதன் பொருள்:-** எங்கள் நாயனே! எங்களுடைய தொழுகையையும் எங்களுடைய நோன்பையும் (எங்களின் தொழுகையிலுள்ள) ருக்கூஉ ஸுஜூதுகளையும் எங்களுடைய உள்ளச்சத்தையும் (பயபக்தி) அங்கீகரிப்பாயாக. நாங்கள் செய்த அமல்களில் ஏற்பட்டிருக்கும் குறைபாடுகளைப் பூர்த்தியாக்கி வைப்பாயாக! இன்னும் எங்களை நன்மை செய்தவர்களோடு மரிக்கச் செய்வாயாக. அருளாளர்களிலெல்லாம் மிக்க அருளாளனே! உன்னுடைய அருட்கொடையைக் கொண்டு இவ்வாறு அருள்புரியக் கோருகிறோம்.

## 71. ஐங்காலத் தொழுகையின் நிய்யத்துக்கள்

ழுகருடைய முந்திய சுன்னத் (முஅக்கதா)

أُصَلِّيْ سُنَّةَ الظُّهْرِ رَكْعَتَيْنِ أَدَاءً
مُسْتَقْبِلًا إِلَى الْكَعْبَةِ الشَّرِيْفَةِ قَبْلِيَّةً
لِلّٰهِ تَعَالَى اَللّٰهُ أَكْبَرُ

"உஸல்லீ ஸுன்னத்தள் ழுஹ்ரி கப்லிய்யதன் ரக்அதைனி அதாஅன் முஸ்தக்பிலன் இலல் கஃபதிஷ் ஷரீபத்தி லில்லாஹித் தஆலா அல்லாஹு அக்பர்."

இதன் பொருள்:- ழுகருடைய முந்திய சுன்னத்து இரண்டு ரக்அத்துக்களையும் அதாவாக கிப்லாவை முன்னோக்கி அல்லாஹ்வுக்காகத் தொழுகிறேன்; அல்லாஹ் மிகப்பெரியவன்;

## 72. ழுகருடைய பர்ளு

أُصَلِّيْ فَرْضَ الظُّهْرِ أَرْبَعَ رَكَعَاتٍ
أَدَاءً مُسْتَقْبِلًا إِلَى الْكَعْبَةِ الشَّرِيْفَةِ
لِلّٰهِ تَعَالَى اَللّٰهُ أَكْبَرُ

"உஸல்லீ பர்ளல் ழுஹ்ரி அர்பஅ ரக்ஆத்தின் அதாஅன் முஸ்தக்பிலன் இலல் கஃபதிஷ் ஷரீபத்தி லில்லாஹித்தஆலா அல்லாஹு அக்பர்."

இதன் பொருள்:- ழுகருடைய பர்ளான நான்கு ரக்அத்துக்களையும் அதாவாக கஃபாவை முன்னோக்கி அல்லாஹ்வுக்காகத் தொழுகிறேன்; அல்லாஹ் மகா பெரியவன்.

## 73. ழுகருடைய பிந்திய ஸுன்னத்து

أُصَلِّي سُنَّةَ الظُّهْرِ رَكَعَتَيْنِ اَدَاءً
مُسْتَقْبِلًا اِلَى الْكَعْبَةِ الشَّرِيْفَةِ بَعْدِيَّةً
لِلّٰهِ تَعَالَى اَللّٰهُ اَكْبَرُ

"உஸல்லீ ஸுன்னத்தழ் ழுஹ்ரி ரக்அதைனி பஃதிய்யத்தன் அதாஅன் முஸ்தக்பிலன் இலல் கஃபதிஷ் ஷரீபத்தி லில்லாஹித் தஆலா அல்லாஹு அக்பர்."

இதன் பொருள்:- ழுகருடைய பிந்தியஸுன்னத்து இரண்டு ரக்அத்துக்களையும் அதாவாக கஃபாவை முன்னோக்கி அல்லாஹ்வுக்காகத் தொழுகிறேன் அல்லாஹ மிகப்பெரியவன்

## 74. அஸருடைய முந்திய ஸுன்னத்

أُصَلِّي سُنَّةَ الْعَصْرِ رَكَعَتَيْنِ اَدَاءً
مُسْتَقْبِلًا اِلَى الْكَعْبَةِ الشَّرِيْفَةِ
لِلّٰهِ تَعَالَى اَللّٰهُ اَكْبَرُ

"உஸல்லீ ஸுன்னத்தழ் அஸ்ரி ரக் அதைனி கப்லிய்யதன் அதாஅன் முஸ்தக்பிலன் இலல்கஃபத்திஷ் ஷரீபத்தி லில்லாஹித் தஆலா அல்லாஹு அக்பர்."

இதன் பொருள்:- அஸருடைய முந்தியஸுன்னத் இரண்டு ரக்அத்தை கஃபாவை முன்னோக்கி அல்லாஹ்வுக்காகத் தொழுகிறேன் அல்லாஹ மகாபெரியவன்

## 75. அஸருடைய பர்ளு

أُصَلِّيْ فَرْضَ الْعَصْرِ اَرْبَعَ رَكَعَاتٍ
اَدَاءً مُسْتَقْبِلًا اِلَى الْكَعْبَةِ الشَّرِيْفَةِ
لِلّٰهِ تَعَالٰى اَللّٰهُ اَكْبَرْ

"உஸல்லீ பர்ளல் அஸ்ரி அர்பஅ ரக்ஆத்தின் அதாஅன் முஸ்தக்பிலன் இலல்கஃபதிஷ் ஷரீபத்தி லில்லாஹித் தஆலா அல்லாஹு அக்பர்."

இதன் பொருள்:- அஸருடைய பர்ளான நான்கு ரக்அத்துக்களையும் அதாவாக கஃபாவை முன்னோக்கி அல்லாஹ்வுக்காகத் தொழுகிறேன். அல்லாஹ் மிகப் பெரியவன்.

## 76. மஃரிபுடைய முந்திய ஸுன்னத்

أُصَلِّيْ سُنَّةَ الْمَغْرِبِ رَكْعَتَيْنِ اَدَاءً
مُسْتَقْبِلًا اِلَى الْكَعْبَةِ الشَّرِيْفَةِ قَبْلِيَّةً
لِلّٰهِ تَعَالٰى اَللّٰهُ اَكْبَرْ

"உஸல்லீ ஸுன்னத்தல் மக்ரிபி ரக்அதைனி கபலிய்யதன் அதாஅன் முஸ்தக்பிலன் இலல்கஃபதிஷ் ஷரீபத்தி லில்லாஹித் தஆலா அல்லாஹு அக்பர்."

இதன் பொருள்:- மஃரிபுடைய முந்திய ஸுன்னத்தான இரண்டு ரக்அத்துக்களையும் கஃபாவை முன்னோக்கி அல்லாஹ்வுக்காகத் தொழுகிறேன்; அல்லாஹ் மகாபெரியவன்

## 77. மக்ரிபுடைய பர்ளு

أُصَلِّيْ فَرْضَ الْمَغْرِبِ ثَلَاثَ رَكَعَاتٍ
اَدَاءً مُسْتَقْبِلًا اِلَى الْكَعْبَةِ الشَّرِيْفَةِ
لِلّٰهِ تَعَالَى اَللّٰهُ اَكْبَرُ

''உஸல்லீ பர்ளல் மஃரிபி தலாத ரக்ஆத்தின் அதாஅன் முஸ்தக்பிலன் இலல்கஃபதிஷ் ஷரீபத்தி லில்லாஹித்தஆலா அல்லாஹு அக்பர்

இதன் பொருள்;- மஃரிபுடைய பர்ளான மூன்று ரக்அத்துக்களையும் சிறப்பான கஃபாவை முன்னோக்கி அல்லாஹ்வுக்காகத் தொழுகிறேன். அல்லாஹ் மகா பெரியவன்.''

## 78. மக்ரிபுடைய பிந்திய ஸுன்னத்

أُصَلِّيْ سُنَّةَ الْمَغْرِبِ رَكْعَتَيْنِ اَدَاءً
مُسْتَقْبِلًا اِلَى الْكَعْبَةِ الشَّرِيْفَةِ بَعْدِيَّةً
لِلّٰهِ تَعَالَى اَللّٰهُ اَكْبَرُ

''உஸல்லீ ஸுன்னத்தல் மஃரிபி ரக்அத்தைனி பஃதிய்யதன் அதாஅன் முஸ்தக்பிலன் இலல் கஃபதிஷ் சரீபத்தி லில்லாஹித்தஆலா அல்லாஹு அக்பர்.''

இதன் பொருள்;- மஃரிபுடைய பிந்திய ஸுன்னத்தான இரண்டு ரக்அத்துக்களையும் அதாவாக கஃபாவை முன்னோக்கி - அல்லாஹ்வுக்காகத் தொழுகிறேன். அல்லாஹ் மகாபெரியவன்.

## 79. இஷாவுடைய முந்திய ஸுன்னத்

أُصَلِّيْ سُنَّةَ الْعِشَاءِ رَكْعَتَيْنِ اَدَاءً
مُسْتَقْبِلًا اِلَى لْكَعْبَةِ الشَّرِيْفَةِ قَبْلِيَّةً
لِلّٰهِ تَعَالٰى اَللّٰهُ اَكْبَرْ

"உஸல்லீ ஸுன்னத்தல் இஷாஈ ரக்அதைனி கப்லிய்யதன் அதாஅன் முஸ்தக்பிலன் இலல் கஃபதிஷ் ஷரீபத்தி லில்லாஹித் தஆலா அல்லாஹு அக்பர்."

இதன் பொருள்:- இஷாவுடைய முந்திய சுன்னத் இரண்டு ரக்அத்துக்களையும் அதாவாக கஃபாவை முன்னோக்கி அல்லாஹ்வுக்காகத் தொழுகிறேன். அல்லாஹ் மகாபெரியவன்.

## 80. இஷாவுடைய பர்ளு

أُصَلِّيْ فَرْضَ لْعِشَاءِ اَرْبَعَ رَكَعَاتٍ
اَدَاءً مُسْتَقْبِلًا اِلَى الْكَعْبَةِ الشَّرِيْفَةِ
لِلّٰهِ تَعَالٰى اَللّٰهُ اَكْبَرْ

"உஸல்லீ பர்ளல் இஷாயி அர்பஅரக்ஆத்தின் அதாஅன் முஸ்தக்பிலன் இலல் கஃபத்திஷ் ஷரீபத்தி லில்லாஹித்தஆலா அல்லாஹு அக்பர்."

இதன் பொருள்:- இஷாவுடைய பர்ளான நான்கு ரக்அத்துக்களையும் அதாவாக கஃபாவை முன்னோக்கி அல்லாஹ்வுக்காகத் தொழுகிறேன். அல்லாஹ் மகாபெரியவன்.

## 81. இஷாவுடைய பிந்திய ஸுன்னத்

أُصَلِّي سُنَّةَ الْعِشَاءِ رَكْعَتَيْنِ أَدَاءً
مُسْتَقْبِلًا إِلَى الْكَعْبَةِ الشَّرِيفَةِ بَعْدِيَّةً
لِلّٰهِ تَعَالَى اَللّٰهُ أَكْبَرُ

''உஸல்லீ ஸுன்னத்தல் இஷாயி ரக்அத்தைனி பஃதிய்யதன் அதாஅன் முஸ்தக்பிலன் இலல் கஃபதிஷ் ஷரீபத்தி லில்லாஹித்தஆலா அல்லாஹு அக்பர்.''

இதன் பொருள்:- இஷாவுடைய பிந்திய ஸுன்னத்தான இரண்டு ரக்அத்துக்களையும் அதாவாக கஃபாவை முன்னோக்கி அல்லாஹ்வுக்காகத் தொழுகிறேன். அல்லாஹ் மகாபெரியவன்.

## 82. ஸுப்ஹுடைய ஸுன்னத்

أُصَلِّي سُنَّةَ الصُّبْحِ رَكْعَتَيْنِ أَدَاءً مُسْتَقْبِلًا
إِلَى الْكَعْبَةِ الشَّرِيفَةِ لِلّٰهِ تَعَالَى اَللّٰهُ أَكْبَرُ

''உஸல்லீ ஸுன்னத்தஸ் ஸுப்ஹி ரக்அத்தைனி அதாஅன் முஸ்தக்பிலன் இலல் கஃபதிஷ் ஷரீபத்தி லில்லாஹித்தஆலா அல்லாஹு அக்பர்.''

இதன் பொருள்:- ஸுப்ஹுடைய ஸுன்னத்தான இரண்டு ரக்அத்துக்களையும் அதாவாக கஃபாவை முன்னோக்கி அல்லாஹ்வுக்காகத் தொழுகிறேன் அல்லாஹ் மகாபெரியவன்.

## 83. ஸுப்ஹுடைய பர்ழு

أُصَلِّي فَرْضَ الصُّبْحِ رَكْعَتَيْنِ أَدَاءً مُسْتَقْبِلًا إِلَى الْكَعْبَةِ الشَّرِيْفَةِ مَأْمُوْمًا لِلّٰهِ تَعَالَى اَللهُ أَكْبَرُ

"உஸல்லீ பர்ளஸ் ஸுப்ஹி ரக்அதைனி அதாஅன் முஸ்தக்பிலன் இலல் கஃபதிஷ் ஷரீபத்தி லில்லாஹித் தஆலா அல்லாஹு அக்பர்."

இதன் பொருள்:- ஸுப்ஹுடைய பர்ளான இரண்டு ரக்அத்துக்களையும் அதாவாக கஃபாவை முன்னோக்கி அல்லாஹ்வுக்காகத் தொழுகிறேன். அல்லாஹ் மகாபெரியவன்

## 84. வித்ருடைய இரண்டு ரக்அத்துக்கள்

أُصَلِّي سُنَّةَ الْوِتْرِ رَكْعَتَيْنِ أَدَاءً مُسْتَقْبِلًا إِلَى الْكَعْبَةِ الشَّرِيْفَةِ لِلّٰهِ تَعَالَى اَللهُ أَكْبَرُ

"உஸல்லீ சுன்னத்தல் வித்ரி ரக்அதைனி அதாஅன் முஸ்தக்பிலன் இலல் கஃபதிஷ் ஷரீபத்தி லில்லாஹித் தஆலா அல்லாஹு அக்பர்."

இதன் பொருள்:- வித்ருடைய ஸுன்னத் இரண்டு ரக்அத்துக்களையும் அதாவாக சிறப்பான கஃபாவை முன்னோக்கியவனாக அல்லாஹ்வுக்காகத் தொழுகிறேன். அல்லாஹ் மிகப் பெரியவன்.

## 85. வித்ருடைய ஒரு ரக்அத்து

أُصَلِّي سُنَّةَ الْوِتْرِ رَكْعَةً أَدَاءً

مُسْتَقْبِلًا اِلَى الْكَعْبَةِ الشَّرِيْفَةِ
لِلّٰهِ تَعَالٰى اَللّٰهُ اَكْبَرُ

"உஸல்லீ ஸுன்னத்தல் வித்ரி ரக்அதன் அதாஅன் முஸ் தக்பிலன் இலல் கஃபதிஷ் ஷரீபத்தி லில்லாஹித்தஆலா அல்லாஹு அக்பர்."

இதன் பொருள்:- வித்ருடைய ஸுன்னத் ஒரு ரக்அத்தை அதாவாக சிறப்பான கஃபாவை முன்னோக்கி அல்லாஹ்வுக்காகத் தொழுகிறேன். அல்லாஹ் மிகப் பெரியவன்.

## 86. ஜும்ஆ தொழுகை

வெள்ளிக் கிழமை லுஹருடைய நேரத்தில் லுஹருடைய நாலு ரக்அத்துக்களைத் தொழாமல், இமாம் குத்பா ஓதி, இரண்டு ரக்அத்துக்கள் இமாமுடன் சேர்ந்து தொழவேண்டும். குறைந்தபட்சம் நாற்பது பேர்களாவது (ஊரில் நிரந்தரமாய் வசிப்பவர்கள்) சமுகமளித்திருக்க வேண்டும்.

## 87. ஜும்ஆ நிறைவேறுவதற்குரிய நிபந்தனைகள் 6

1. பாங்கு சப்தம் கேட்கும் எல்லைக்குட்பட்ட இடத்தில் ஜும்ஆ தொழுகை நிகழவேண்டும். 2. ஜும்ஆ தொழுது ஸலாம் கொடுக்கும்வரை லுஹருடைய நேரம் இருக்க வேண்டும். 3. ஓர் ஊரில் ஒரு ஜும் ஆத்தான் தொழ வேண்டும். 4. இமாமைச் சேர்த்து நாற்பது பேருக்கும் குறைவில்லாமல் தொழுகை நிகழவேண்டும். 5. முந்தின ரக்அத்து முழுவதிலும் இமாமைப் பின்பற்றி இருத்தல். ஒருவர் இரண்டாம் ருக்கூஉக்குப் பிறகு வந்து இமாமுடன் சேர்ந்தால் ஜும்ஆ நிய்யத்துடன் நான்கு ரக்அத்துக்கள் தொழவேண்டும். 6. இரண்டு குத்பாவிற்குப் பிறகு தொழுகை நடைபெற வேண்டும்.

88. ஜு ம்ஆ தொழுகையின் முந்தின ஸுன்னத்து

أُصَلِّيْ سُنَّةَ الْجُمُعَةِ رَكْعَتَيْنِ مُسْتَقْبِلًا

اِلَى الْكَعْبَةِ الشَّرِيفَةِ قَبْلِيَّةً لِلّٰهِ

تَعَالٰى اَللّٰهُ اَكْبَرُ

"உஸல்லீ ஸுன்னதல் ஜுமுஆ ரக்அதைனி கப்லிய்யதன் அதாஅன் இலல்கஃபதிஷ் ஷரீபத்தி லில்லாஹித்தஆலா அல்லாஹு அக்பர்."

இதன் பொருள்:- ஜும்ஆவின் முந்தின ஸுன்னத் இரண்டு ரக்அத்துக்களையும் அதாவாக சிறப்பான கஃபாவை முன்னோக்கி அல்லாஹ்வுக்காக தொழுகிறேன் அல்லாஹ் மிகப் பெரியவன்.

89. ஜும்ஆ தொழுகையின் நிய்யத்து

أُصَلِّيْ فَرْضَ الْجُمُعَةِ رَكْعَتَيْنِ اَدَاءً مُسْتَقْبِلًا

اِلَى الْكَعْبَةِ الشَّرِيْفَةِ مَأْمُوْمًا لِلّٰهِ تَعَالٰى اَللّٰهُ اَكْبَرُ

"உஸல்லீ பர்ளல் ஜும்அத்தி ரக்அதைனி அதாஅன் முஸ்தக்பிலன் இலல் கஃபதிஷ் ஷரீபத்தி மஃமூமன் லில்லாஹிதஆலா அல்லாஹு அக்பர்."

இதன் பொருள்:- ஜும்ஆவுடைய பர்ளு இரண்டு ரக்அத்துக்களையும் இமாமுடன் சிறப்பான கஃபாவை முன்னோக்கி அல்லாஹவுக்காகத் தொழுகிறேன். அல்லாஹ் மிகப பெரியவன்.

90. ஜும்ஆவின் பிந்தின ஸுன்னத்து

أُصَلِّيْ سُنَّةَ الْجُمُعَةِ رَكْعَتَيْنِ مُسْتَقْبِلًا

إِلَى الْكَعْبَةِ الشَّرِيفَةِ بَعْدِيَّةً لِلّٰهِ
تَعَالَى اَللّٰهُ اَكْبَرْ

"உஸல்லீ ஸுன்னத்தல் ஜும்அத்தி ரக்அதைனி பஃதிய்ய தன் அதாஅன் முஸ்தக்பிலன் இலல்கஃபதிஷ் ஷரீபத்தி லில்லாஹி தஆலா அல்லாஹு அக்பர்."

இதன் பொருள்:- ஜும்ஆவின் பிந்திய ஸுன்னத் இரண்டு ரக்அத்துக்களையும் அதாவாக சிறப்பான கஃபாவை முன்னோக்கியவனாக அல்லாஹ்வுக்காக தொழுகிறேன். அல்லாஹ் மிகப் பெரியவன்.

## 91. தராவீஹ் தொழுகையின் நிய்யத்து

أُصَلِّي صَلٰوةَ التَّرَاوِيْحِ رَكْعَتَيْنِ أَدَاءً
مُسْتَقْبِلًا إِلَى الْكَعْبَةِ الشَّرِيْفَةِ لِلّٰهِ
تَعَالَى مَأْمُوْمًا اَللّٰهُ اَكْبَرْ

"உஸல்லீ ஸலாத்தத் தராவீஹி ரக்அதைனி அதாஅன் முஸ்தக்பிலன் இலல் கஃபதிஷ் ஷரீபத்தி மஃமூமன் லில்லாஹி தஆலா அல்லாஹு அக்பர்."

இதன் பொருள்:- தராவீஹ் தொழுகை இரண்டு ரக்அத்துககளையும் அதாவாக சிறப்பான கஃபாவை முன்னோக்கி மஃமூமாக அல்லாஹ்வுக்காகத் தொழுகிறேன். அல்லாஹ் மிகப் பெரியவன்.

## 92. ரமழான் முதல் பத்தில்

ரமழான் மாதத்தில் முதல் பத்து தினங்களில் அல்லாஹ்விடம் அவனது அருளை அதிகமாகக் கேட்டு பின்வரும் துஆவை ஓதவேண்டும்.

اَللّٰهُمَّ ارْحَمْنَا بِرَحْمَتِكَ يَا اَرْحَمَ الرَّاحِمِيْنَ

"அல்லாஹும்ம ர்ஹம்னா பிரஹ்மதிக யாறப்பல் ஆலமீன்"

இதன் பொருள்:- இறைவா! உன் அருளைக் கொண்டு எனக்கு அருள் புரிவாயாக.

படைப்புகள் யாவற்றையும் படைத்துப் போஷித்து பரிபக்குவப் படுத்துகிற நாயனே!

### 93. ரமழான் நடுப்பத்தில்

ரமழான் நடுப்பத்து தினங்களில் அல்லாஹ்விடம் பாவ மன்னிப்பை அதிகமாகக் கேட்டு பின்வரும் துஆவை ஓத வேண்டும்.

اَللّٰهُمَّ اغْفِرْ لَنَا ذُنُوْبَنَا وَخَطَايَانَا

كُلَّهَا يَا رَبَّ الْعَالَمِيْنَ

"அல்லாஹும்ம ஃபிர்லனா துனூபனா வகதாயானா குல்லஹா யாறப்பல் ஆலமீன்."

இதன் பொருள்:- உலகரட்சகா! எம் சிறிய பெரிய பாவங்கள் அடங்கலையும் மன்னித்தருள்வாயாக.

### 94. ரமழான் கடைசிப் பத்தில்

ரமழான் மாதத்தின் 21ம் நாளிலிருந்து நரகத்தை விட்டும் விடுதலையாக அல்லாஹ்விடம் இந்த துஆவை கேட்க வேண்டும்.

اَللّٰهُمَّ اَعْتِقْنَا مِنَ النَّارِ وَاَدْخِلْنَا الْجَنَّةَ

يَا رَبَّ الْعَالَمِيْنَ

"அல்லாஹும்ம அஃதிக்னா மினன்னார் வஅத்ஹில்னல் ஜன்னத்த யாரப்பல் ஆலமீன்."

இதன் பொருள்:- இறைவா! எம்மை நரகத்தை விட்டும் விடுதலையாக்கி சுவனபதிக்குள் நுழைய வைப்பாயாக உலக ரட்சகனே!

## 95. நோன்பின் நிய்யத்து

نَوَيْتُ صَوْمَ غَدٍ عَنْ اَدَاءِ فَرْضِ رَمَضَانَ
هٰذِهِ السَّنَةِ لِلّٰهِ تَعَالٰى

"நவைத்து சவ்மகதின் அன்அதாயி பர்ளி ரமழான ஹாதிஹிஸ் ஸனதி லில்லாஹி தஆலா"

இதன் பொருள்:- இந்த வருடத்தின் ரமழான் மாதத்தின் பர்ளான நோன்பை அதாவாக நாளைப்பிடிக்க அல்லாஹ்வுக்காக நிய்யத்துச் செய்கிறேன்.

## 96. நோன்பு திறக்கும் போது

اَللّٰهُمَّ لَكَ صُمْتُ وَبِكَ آمَنْتُ وَعَلَيْكَ تَوَكَّلْتُ
وَعَلٰى رِزْقِكَ اَفْطَرْتُ فَتَقَبَّلْ مِنِّيْ

"அல்லாஹும்ம லகசும்து வபிகஆமன்து வஅலேக்க தவக்கல்து வஅலா றிஸ்கிக அப்தர்து பத்தகப்பல் மின்னீ."

இதன் பொருள்: இறைவா! உனக்காக நோன்பு நோற்றேன். உன்மீது விசுவாசம்கொண்டேன். உன்னிடமே (எனது காரியத்தை) பாரம் சாட்டினேன். உனது உணவைக் கொண்டே நோன்பு திறந்தேன். எனவே (என்னுடைய நோன்பை) நீ அங்கீகரித்தருள்வாயாக.

## 97. தஸ்பீஹ் தொழுகை

'தஸ்பீஹ்' என்றால் பரிசுத்தப்படுத்துதல் என்பதாகும் இத்தொழுகையை நாளாந்தம் தொழுதுவரலாம். அதற்கு முடியாது போனால் வாரந்தோறும் ஒருமுறை தொழுதுவரலாம். இதற்கும் முடியாது போனால் மாதம் ஒருமுறை அல்

லது வருடம் ஒருமுறையாவது தொழுது வரலாம் இவ்வாறும் தொழமுடியாத பட்சத்தில் தனது வாழ்நாளில் ஒரு தடவையாவது தொழுவது ஸுன்னத்தாகும். இதில் நான்கு ரக்அத்துக்கள் தொழவேண்டும். அதில் இவ்விரண்டு ரக்அத்துக்களாகத் தொழுது ஸலாம் கொடுக்க வேண்டும்.

## 98. தஸ்பீஹ் தொழும் முறை வருமாறு

முதலாம் தக்பீருக்குப் பின் வஜ்ஜஹ்த்து ஓதி பின்பு அஊது பிஸ்மியுடன் பாத்திஹா சூராவை ஓதவேண்டும். இதன்பின் கீழ்தரப்பட்டுள்ள ஸுப்ஹானல்லா கலிமாவை 15 தடவை ஓதவேண்டும்.

ருக்கூவில் 10 தடவையும், இஃதிதால் நிலையில் 10 தடவையும் முதலாம் ஸுஜூதில் 10 தடவையும், நடுஇருப்பில் 10 தடவையும், இரண்டாம் ஸுஜூதில் 10 தடவையும், இஸ்த்திராஹத்து இருப்பில் அதாவது (இரண்டாம் ஸுஜூதுக்குப்பின் கொஞ்சம் இருத்தல்) 10 தடவையும் என்ற பிரகாரம் ஒரு ரக்அத்தில் 75 தடவைகள் மேற்படி கலிமாவை ஓதிக்கொள்ளல் வேண்டும். மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு நிலைகளிலும் வழக்கமாக ஓதுகின்ற ஓதல்களையும், திக்றுக்களையும் ஓதிய பிறகே ஸுப்ஹானல்லா கலிமாவை ஓதுதல் வேண்டும் ஆனால் அத்தஹிய்யாத்து ஓதவேண்டிய இடங்களில் மட்டும் கலிமாவை ஓதிய பிறகே அத்தஹிய்யாத்தை ஓதவேண்டும்.

இவ்வாறு ஒரு ரக்அத்தில் 75 தஸ்பீஹ் என்ற வீதம்; மேற்குறிப்பிட்ட ஒழுங்கு முறைப்படி நான்கு ரக்அத்துக்களையும் தொழுது முடிக்க வேண்டும். ஆக தஸ்பீஹ் தொழுகையில் 300 தஸ்பீஹ்கள் ஓதப்பட்டிருத்தல் வேண்டும்.

தஸ்பீஹ் தொழுகையில் ஓதவேண்டிய ஸுப்ஹானல்லாஹ் கலிமா பின்வருமாறு:-

سُبْحَانَ اللّٰهِ وَالْحَمْدُ لِلّٰهِ وَلَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَاللّٰهُ اَكْبَرُ

وَلَا حَوْلَ وَلَا قُوَّةَ اِلَّا بِاللّٰهِ الْعَلِيِّ الْعَظِيْمِ ,

"ஸுப்ஹானல்லாஹி வல்ஹம்துலில்லாஹி வலாயிலாஹ இல்லல்லாஹு வல்லாஹு அக்பர். வலாஹவ்ல வலாகுவ்வத்த இல்லா பில்லாஹில் அலிய்யில் அழீம்.

**இதன் பொருள்:-** அல்லாஹ் மிகப் பரிசுத்தமானவன். எல்லாப்புகழும் அவனுக்கே சொந்தமானது. இன்னும் அல்லாஹ் மிகப் பெரியவன், உயர்வும் மகிமையும் உள்ள அல்லாஹ்வின் உதவியின்றி பாவத்தை விட்டும் விலகவும் நன்மையைச் செய்யவும் எவருக்கும் சக்தி கிடையாது.

**குறிப்பு:-** இத்தொழுகையில் குறிப்பிட்ட சூறுக்கள் மட்டுமே ஓதப்படல் வேண்டும். அச்சூறுக்களின் விபரம் பின்வருமாறு:-

முதல் ரக்அத்தில் "அல்ஹாக்கும்" இரண்டாம் ரக்அத்தில் "வல்அஸ்ரியும்" மூன்றும் ரக்அத்தில் "குல்யா அய்யுஹல் காபிரூனும்" நான்காம் ரக்அத்தில் "குல்ஹுவல்லாஹு அஹத்" ஆகிய சூறுக்கள் மட்டுமே ஓதவேண்டும்.

## 99 தஸ்பீஹ் தொழுகையின் நிய்யத்து

أُصَلِّيْ سُنَّةَ التَّسْبِيْحِ رَكْعَتَيْنِ أَدَاءً
مُسْتَقْبِلًا إِلَى الْكَعْبَةِ الشَّرِيْفَةِ
لِلّٰهِ تَعَالَى أَللّٰهُ أَكْبَرْ

"உஸல்லீ ஸுன்னத்த தஸ்பீஹி ரக்அதைனி அதாஅன் முஸ்தக்பிலன் இலல் கஃபதிஷ் ஷரீபத்தி லில்லாஹி தஆலா அல்லாஹு அக்பர்."

**இதன் பொருள்:-** தஸ்பீஹ் உடைய ஸுன்னத்து இரண்டு ரக்அத்துக்களையும் அதாவாக சிறப்பான கஃபாவை முன்னோக்கி அல்லாஹ்வுக்காகத் தொழுகிறேன். அல்லாஹ் மிகப் பெரியவன்.

## 100. நோன்புப் பெருநாள் தக்பீர்

ரமழான்மாதம் முடிவடைவதற்கான பிறையைக் கண்டதிலிருந்து பெருநாள் தொழுகையை ஜமா அத்தாகத் தொழும்வரை தக்பீர் சொல்லவேண்டும்.

## 101. ஹஜ்ஜுப் பெருநாள் தக்பீர்

துல்ஹஜ் மாதம் பிறை 9 ஆம் தினமான அரபாநாள் ஸுப்ஹுத் தொழுகை தொடக்கம், பிறை 13 ஆம் நாள் அஸர் தொழுகைவரை தக்பீர் சொல்லவேண்டும். அதாவது ஒவ்வொரு பர்ளான ஸுன்னத்தான அதாவான, கழாவான தொழுகைக்குப் பிறகும் மையித்துத் தொழுகைக்குப் பிறகும் எல்லா நேரங்களிலும் எல்லா இடங்களிலும் தக்பீர் சொல்வது ஸுன்னத்தாகும்.

## 102. தக்பீர் சொல்லும் முறை

اَللّٰهُ اَكْبَرُ اَللّٰهُ اَكْبَرُ اَللّٰهُ اَكْبَرُ لَا اِلٰهَ اِلَّا اللّٰهُ
وَاللّٰهُ اَكْبَرُ اَللّٰهُ اَكْبَرُ وَلِلّٰهِ الْحَمْدُ اَللّٰهُ اَكْبَرُ
اَللّٰهُ اَكْبَرُ اَللّٰهُ اَكْبَرُ كَبِيْرًا وَالْحَمْدُ لِلّٰهِ كَثِيْرًا
وَسُبْحَانَ اللّٰهِ وَبِحَمْدِهٖ بُكْرَةً وَّاَصِيْلًا لَا اِلٰهَ
اِلَّا اللّٰهُ وَلَا نَعْبُدُ اِلَّا اِيَّاهُ مُخْلِصِيْنَ لَهُ الدِّيْنَ
وَلَوْ كَرِهَ الْكٰفِرُوْنَ لَا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ وَصَدَقَ
وَعْدَهٗ وَنَصَرَ عَبْدَهٗ وَاَعَزَّ جُنْدَهٗ وَهَزَمَ
الْاَحْزَابَ وَحْدَهٗ لَا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَاللّٰهُ اَكْبَرُ
اَللّٰهُ اَكْبَرُ وَلِلّٰهِ الْحَمْدُ

## 103. நோன்புப் பெருநாள் தொழுகையின் நிய்யத்து

اُصَلِّيْ سُنَّةَ عِيْدَ الْفِطْرِ رَكَعَتَيْنِ مُسْتَقْبِلًا اِلَى الْكَعْبَةِ
الشَّرِيْفَةِ مَأْمُوْمًا لِلّٰهِ تَعَالٰى اَللّٰهُ اَكْبَرُ

"உஸல்லீ ஸுன்னத்த ஈதில் பித்ரி ரக்அதைனி அதாஅன் முஸ்தக்பிலன் இலல் கஃபதிஷ் ஷரீபத்தி லில்லாஹி தஆலா அல்லாஹு அக்பர்."

இதன் பொருள்:- 'ஈதுல் பித்ரு' ஸுன்னத் இரண்டு ரக்அத்துக்களையும் சிறப்பான கஃபாவை முன்னோக்கி இமாமுடன் அல்லாஹ்வுக்காகத் தொழுகிறேன். அல்லாஹ் மஹா பெரியவன்.

## 104. ஹஜ்ஜுப் பெருநாள் நிய்யத்து

اُصَلِّيْ سُنَّةَ عِيْدِ الْاَضْحٰى رَكْعَتَيْنِ
اَدَاءً مُسْتَقْبِلًا اِلَى الْكَعْبَةِ الشَّرِيْفَةِ
لِلّٰهِ تَعَالٰى اَللّٰهُ اَكْبَرُ

"உஸல்லீ ஸுன்னத ஈதில் அழ்ஹா ரக்அத்தைனி அதா அன் முஸ்தக்பிலன் இலல் கஃபதிஷ் ஷரீபத்தி மஃமூமன் லில்லாஹி தஆலா அல்லாஹு அக்பர்."

இதன் பொருள்:- 'ஈதுல் அழ்ஹா' ஸுன்னத் இரண்டு ரக் அத்துக்களையும் சிறப்பான கஃபாவை முன்னோக்கி இமாமுடன் அல்லாஹ்வுக்காகத் தொழுகிறேன். அல்லாஹ் மஹா பெரியவன்.

## 105. பெருநாள் தொழுகையின் விபரம்

பெருநாள் தினத்தன்று சூரியன் உதயமாகி வல்லயப்

பிரமாணம் உயர்ந்த பிறகு, முதலாம் ரக்அத்தில், ஆரம்ப தக்பீரைத் தவிர 7 முறையும், இரண்டாவது ரக்அத்தில் நிலைக்கு வரும் தக்பீரைத் தவிர 5 முறையும் கைகளை உயர்த்தி தக்பீர் கட்ட வேவண்டும். ஒவ்வொரு தக்பீருக்குமிடையில் பின்வரும் கலிமாவை ஓதிக்கொள்ளல் வேண்டும்.

سُبْحَانَ اللّٰهِ وَالْحَمْدُ لِلّٰهِ وَلَا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَاللّٰهُ اَكْبَرُ

"ஸுப்ஹானல்லாஹி வல்ஹம்துலில்லாஹி வலாஇலாஹ இல்லல்லாஹு வல்லாஹு அக்பர்."

## 106 ஜனாஸாத் தொழுகை

ஒரு முஸ்லிமான ஆணோ பெண்ணோ மரணித்து விட்டால்அதற்குச் செய்யவேண்டிய கடமைகள் நாலு.
(1) அம்மையித்தைக் குளிப்பாட்டல். (2) கபனிடல்
(3) தொழுவித்தல். (4) மார்க்கச் சட்டப்படி நல்லடக்கம் செய்தல்.

## 107. ஜனாஸாத் தொழுகையின் நிய்யத்து

اُصَلِّيْ فَرْضَ الصَّلَاةِ عَلٰى هٰذَا الْمَيِّتِ اَرْبَعَ
تَكْبِيْرَاتٍ مَاْمُوْمًا لِلّٰهِ تَعَالٰى اَللّٰهُ اَكْبَرُ

"உஸல்லீ பர்ளஸ் ஸலாத்தி அலா ஹாதல் மைய்யித்தி அர்பஅ தக்பீராத்தின் மஃமூமன் லில்லாஹி தஆலா அல்லாஹு அக்பர்."

இதன் பொருள்:- இந்த மையித்தின்மீது பர்ளான தொழுகையை நான்கு தக்பீர்களுடன் மஃமூமாக அல்லாஹ்வுக்காகத் தொழுகிறேன். அல்லாஹ் மிகப் பெரியவன்.

## 108. ஜனாஸா தொழுகையின் விதிகள் 7

(1) ஜனாஸா தொழுவதாக நிய்யத்துவைத்தல். (2) தொழ சக்தியுள்ளவர்கள் நின்று தொழல். (3) முதல் தக்பீர் உட்பட நான்கு தக்பீர்கள் சொல்லல். (4) முதலாம் தக்

பீருக்குப்பின் ஸூரத்துல் பாதிஹா ஓதுதல். (5) இரண்டாம் தக்பீருக்குப்பின் ஸலவாத்து ஓதுதல். (6) மூன்றும் தக்பீருக்குப்பின் மையித்தின் மறுமையின் காரியத்திற்காக பிழைபொறுக்கத் தேடுதல். (7) நான்காவது தக்பீருக்குப் பின் ஸலாம் சொல்லுதல்.

**109. இரண்டாம் தக்பீருக்குப்பின் ஓதும் ஸலவாத்து**

''மையித்துத் தொழுகையில் இரண்டாம் தக்பீருக்குப் பின் பின்வரும் ஸலவாத்தை மட்டும் ஓதினாலும் போதுமானதாகும்.

اَللّٰهُمَّ صَلِّ عَلٰى سَيِّدِنَا مُحَمَّدٍ وَّعَلٰى
آلِ سَيِّدِنَا مُحَمَّدٍ

**''அல்லாஹும்ம ஸல்லிஅலா ஸெய்யிதிஞ முகம்மதின் வஅலா ஆலி ஸெய்யிதிஞ முகம்மதின்.**

**இதன் பொருள்:-** யாஅல்லாஹ் எங்கள் நாயகம் முகம்மது (ஸல்) அவர்கள் மீதும் அவர்கள் குடும்பத்தார் மீதும் ஸலவாத்தைக் கூறுவாயாக.

**110. மூன்றும் தக்பீருக்குப் பின்**

اَللّٰهُمَّ غْفِرْلَهٗ وَارْحَمْهُ

**''அல்லாஹும் மஃபிர்லஹு வர்ஹம்ஹு**

**என்று**கூறினாலும் போதுமானதாகும். விரிவாகஓதுவதானுல்

اَللّٰهُمَّ اغْفِرْ لِحَيِّنَا وَمَيِّتِنَا وَشَاهِدِنَا وَغَائِبِنَا
وَصَغِيْرِنَا وَكَبِيْرِنَا وَذَكَرِنَا وَاُنْثَانَا اَللّٰهُمَّ
مَنْ اَحْيَيْتَهُ مِنَّا فَاَحْيِهِ عَلَى الْاِسْلَامِ وَمَنْ تَوَفَّيْتَهُ
مِنَّا فَتَوَفَّهُ عَلَى الْاِيْمَانِ ۝

இதன் பொருள்:- இறைவா! இந்த மையித்தின் பாவங்களை மன்னித்து கிருபை செய்தருள். அல்லாஹ்வே எங்களில் ஜீவிப்பவர் இறந்தவர், பிரசன்னமாயிருப்பவர், மறைந்திருப்பவர், சிறியோர், பெரியோர், ஆண் - பெண் யாவருக்கும் நீ பிழைபொறுத்தருள்; இறைவா! எங்களில் யாரை உயிர் வாழச்செய்கின்றாயோ அவரை இஸ்லாத்தின் மீது உயிர் வாழச்செய் இன்னும் எங்களை யாரை மரிக்கச் செய்வாயோ அவரை ஈமானின் மீது நீ மரிக்கச் செய்.

## 111. நான்காம் தக்பீருக்குப் பின்

اَللّٰهُمَّ لَا تَحْرِمْنَا اَجْرَهُ وَلَا تَفْتِنَّا بَعْدَهُ
وَاغْفِرْ لَنَا وَلَهُ

"அல்லாஹும்ம லாதஹ்ரிம்னா அஜ்ரஹு வலா தப்தின்னா பஃதஹு வஃபிர்லனா வலஹு."

இதன் பொருள்:- யா அல்லாஹ்! இவர் (இறந்தவர்) அடையும் கூலியில் எங்களைப் பேறுகொடுத்து விடாதே! இவருக்குப் பின் எங்களைச் சோதனையிலாக்கி விடாதே. இவருக்கும் எங்களுக்கும் பாவங்களை மன்னிப்பாயாக.

## 112. தஹஜ்ஜுத் தொழுகை

இது இரவில் சிறிது நேரமாகிலும் நித்திரைசெய்து விழித்தபின் தொழும் தொழுகையாகும். ஸுப்ஹு நேரம்வரை இத்தொழுகையை நிறைவேற்றலாம். இதில் கூடுதலாக எத்தனை ரக்அத்துக்களும் தொழுது கொள்ளலாம். குறைந்தது இரண்டு ரக்அத்துக்களாகும்.

இந்த தஹஜ்ஜுத் தொழுகையின் பின் வித்ரு தொழுது கொள்வது ஆகச் சிறந்தது.

## 113. தஹஜ்ஜுத் தொழுகையின் நிய்யத்து வருமாறு:-

اُصَلِّيْ سُنَّةَ التَّهَجُّدِ رَكْعَتَيْنِ اَدَاءً
مُسْتَقْبِلًا اِلَى الْكَعْبَةِ الشَّرِيْفَةِ
لِلّٰهِ تَعَالٰى اَللّٰهُ اَكْبَرُ

"உஸல்லீ ஸுன்னதத் தஹஜ்ஜுதி ரக்அதைனி அதாஅன் முஸ்தக்பிலன் இலல் கஃபதிஷ் ஷரீபத்தி லில்லாஹி தஆலா அல்லாஹு அக்பர்."

இதன் பொருள்:- தஹஜ்ஜுத் உடைய ஸுன்னத்தான இரண்டு ரக்அத்துக்களையும் அதாவாக சிறப்பான கஃபாவை முன்னோக்கி அல்லாஹ்வுக்காகத் தொழுகிறேன். அல்லாஹ் மிகப் பெரியவன்.

## 114. தஹிய்யத்துல் மஸ்ஜித் தொழுகை

"தஹிய்யதுல் மஸ்ஜித்" என்றால் பள்ளிவாசல் காணிக்கை என்பதாகும். பள்ளிவாசலுக்குள் புகுந்தவுடன் உட்காருவதற்கு முன் இரண்டு ரக்அத்து ஸுன்னத்துத் தொழவேண்டும். அதன் நிய்யத்து வருமாறு:-

أُصَلِّيْ سُنَّةَ تَحِيَّةِ الْمَسْجِدِ رَكْعَتَيْنِ
اَدَاءً مُسْتَقْبِلًا اِلَى الْكَعْبَةِ الشَّرِيْفَةِ
لِلّٰهِ تَعَالٰى اَللّٰهُ اَكْبَرْ

"உஸல்லீ ஸுன்னத தஹிய்யதில் மஸ்ஜிதி ரக்அதைனி அதாஅன் முஸ்தக்பிலன் இலல் கஃபதிஷ் ஷரீபத்தி லில்லாஹி தஆலா அல்லாஹு அக்பர்."

இதன் பொருள்:- தஹிய்யத்துல் மஸ்ஜிதுடைய ஸுன்னத்தான இரண்டு ரக்அத்துக்களையும் அதாவாக கஃபாவை முன்னோக்கி அல்லாஹ்வுக்காகத் தொழுகிறேன். அல்லாஹ் மிகப் பெரியவன்.

## 115. இஸ்திகாரா தொழுகை

"இஸ்திகாரா என்பது நலவைத் தேடுதல் என்பதாகும் வியாபாரம், விவாகம், விவசாயம், வீடு கட்டுதல். பிரயாணம் போன்ற வாழ்க்கையில் ஏற்படும் எல்லா நற்காரியங்களைத் தொடங்கும் போது, தொடங்கும் காரியம் நலமாக முடிய வேண்டும் என இரண்டு ரக்அத்து ஸுன்னத் தொழுவதாகும்.

இதன் நிய்யத்து வருமாறு

أُصَلِّيْ سُنَّةَ الْإِسْتِخَارَةِ رَكْعَتَيْنِ
اَدَاءً مُسْتَقْبِلًا اِلَى الْكَعْبَةِ الشَّرِيْفَةِ
لِلّٰهِ تَعَالَى اَللّٰهُ اَكْبَرْ

"உஸல்லீ ஸுன்னத்தல் இஸ்திகாரத்தி ரக்அதைனி அதாஅன் முஸ்தக்பிலன் இலல் கஃபதிஷ் ஷரீபத்தி லில்லாஹி தஆலா அல்லாஹு அக்பர்."

இதன் பொருள்:- 'இஸ்திகாரா' ஸுன்னத்தான இரண்டு ரக்அத்துக்களையும் அதாவாக சிறப்பான கஃபாவை முன்னோக்கி அல்லாஹ்வுக்காகத் தொழுகிறேன். அல்லாஹ் மிகப் பெரியவன்.

## 116. தஹிய்யதுல் உலூ தொழுகை

தஹிய்யதுல் உலூ என்றால், உலூவின் காணிக்கையாகும் இத்தொழுகை உலூசெய்து நீர் உலரமுன் 2 ரக்அத்துக்கள் ஸுன்னத் தொழுவதாகும். இதன் நிய்யத்து வருமாறு:-

أُصَلِّيْ سُنَّةَ الْوُضُوْءِ رَكْعَتَيْنِ اَدَاءً
مُسْتَقْبِلًا اِلَى الْكَعْبَةِ الشَّرِيْفَةِ
لِلّٰهِ تَعَالَى اَللّٰهُ اَكْبَرْ

"உஸல்லீ ஸுன்னத்தல் வுழூயி ரக்அதைனி அதாஅன் முஸ்தக்பிலன் இலல் கஃபதிஷ் ஷரீபத்தி லில்லாஹி தஆலா அல்லாஹு அக்பர்."

இதன் கருத்து:- உலூவின் காணிக்கை ஸுன்னத் 2ரக்அத்தை அதாவாக சிறப்பான கஃபாவை முன்னோக்கியவனாக அல்லாஹ்வுக்காக தொழுகிறேன். அல்லாஹு அக்பர்.

## 117. இஷ்ராக் தொழுகை

இஷ்ராக் தொழுகை சூரியன் உதித்தபிறகு தொழும் தொழுகையாகும். சூரியன் உதித்து சுமார் 7 முழ அளவுக்கு உயர்ந்த பிறகு 2 ரக்அத் ஸுன்னத்து தொழவேண்டும். அதன் நிய்யத்து வருமாறு:-

أُصَلِّيْ سُنَّةَ الْإِشْرَاقِ رَكْعَتَيْنِ اَدَاءً
مُسْتَقْبِلًا اِلَى الْكَعْبَةِ الشَّرِيْفَةِ
لِلّٰهِ تَعَالٰى اَللّٰهُ اَكْبَرْ

**"உஸல்லீ ஸுன்னத்தல் இஷ்ராகி ரக்அதைனி அதாஅன் முஸ்தக்பிலன் இலல் கஃபதிஷ் ஷரீபத்தி லில்லாஹி தஆலா அல்லாஹு அக்பர்."**

**இதன் கருத்து:-** இஷ்ராக்குடைய ஸுன்னத் 2 ரக்அத்தை சிறப்பான கஃபாவை முன்னோக்கியவனாக அல்லாஹ்வுக்காக தொழுகிறேன். அல்லாஹு அக்பர்.

## 118. அவ்வாபீன் தொழுகை

அவ்வாபீன் தொழுகை மஃரிபு ஸுன்னத்துக்குப் பிறகு தொழும் தொழுகையாகும். இதில் கூடுதல் 20 ரக்அத்துக்கள் குறைந்தது 2 ரக்அத்துகளாகும். அதன் நிய்யத்து வருமாறு;-

أُصَلِّيْ سُنَّةَ الْاَوَّابِيْنَ رَكْعَتَيْنِ اَدَاءً
مُسْتَقْبِلًا اِلَى الْكَعْبَةِ الشَّرِيْفَةِ لِلّٰهِ
تَعَالٰى اَللّٰهُ اَكْبَرْ

**"உஸல்லீ ஸுன்னத்தல் அவ்வாபீன் ரக்அதைனி அதாஅன் முஸ்தக்பிலன் இலல் கஃபதிஷ் ஷரீபத்தி லில்லாஹி தஆலா அல்லாஹு அக்பர்."**

இதன் கருத்து:- அவ்வாபீன் ஸுன்னத்து 2 ரக்அத்தை அதாவாக சிறப்பான கஃபாவை முன்னோக்கியவனாக அல்லாஹ்வுக்காக தொழுகிறேன். அல்லாஹு அக்பர்.

## 119. கஸ்றுத்தொழுகையும் ஜம்உத்தொழுகையும்

பிரயாணம் செய்யும் ஒருவர் சுமார் 82 மைல் தூரமும் அதற்கு மேலும் செல்ல நேர்ந்தால் 4 ரக்அத்துள்ள பர்ழு தொழுகையை 2 ரக்அத்தாகச் சுருக்கித் தொழுவதாகும். இதற்கு கஸ்று என்றும் பெயர்.

இதைத்தவிர ழுஹரையும் அஸ்ரையும் ஒன்றாகச்சேர்த்து முற்படுத்தியோ, அன்றி பிற்படுத்தியோ தொழலாம் அவ்வாறே மஃரிபையும், இஷாவையும் ஒன்றுசேர்த்து முற்படுத்தியோ பிற்படுத்தியோ தொழலாம். இதற்கு ஜம்உத்தொழுகை என்று பெயர்.

கஸ்றையும், ஜம்மையும் சேர்த்துத்தொழலாம். இதற்கு கஸ்று ஜம்உ என்று பெயர். ஒருவன் தனது ஊர்எல்லையை விட்டுக் குறித்த ஸ்தலத்தை வந்தடையும் வரை அல்லது இடையில் ஒருஸ்தலத்தில் நாலுநாட்கள் அல்லது குறையத் தங்குவதாக நிய்யத்து இருக்கும்வரை கஸ்று தொழலாம். குறித்த எண்ணமில்லாமல் அவ்விடமிருந்து நாளை செல்வோமா என்று எண்ணிக் கொண்டிருந்தால் 3நாள் வரை கஸ்றும் ஜம்மும் செய்யலாம்.

## 120. கஸ்றின் நிபந்தனைகள்

கஸ்றுத் தொழுகையின் நிபந்தனைகள் வருமாறு:-

(1) தக்பீரில் கஸ்று செய்து தொழுவதாக நிய்யத்து வைத்தல். (2) நிறப்பமாய் தொழும் இமாமை பின்பற்றாதிருத்தல். (3) தொழுகை முடியும்வரை நிய்யத்தை மாற்றாமலும் பிரயாணத்தை முடிக்காமலும் இருத்தல் வேண்டும்.

மஃரிபு தொழுகையில் கஸ்றில்லை. ஸுப்ஹில் கஸ்றும் ஜம்உம் இல்லை.

## 121. ஜம்உத் தக்தீமின் நிபந்தனைகள்

ஜம்உத் தக்தீமை முற்படுத்திச் சேர்ப்பதின் நிபந்தனைகள் வருமாறு:-

(1) முந்தியதை முந்தியும், பிந்தியதை பிந்தியும் ஒழுங்கு கிரமமாய் நிறைவேற்றல். (2) முந்திய தொழுகை ளுகர் எனில் ளுஹருடன் அஸ்ரைச் சேர்த்துத் தொழுவதை முந்தின தொழுகையில் ஸலாம் கொடுக்குமுன் நிய்யத்து வைத்தல். (3) இரண்டு தொழுகையையும் தொடர்ச்சியாக தொழல். (4) பிந்தின தொழுகையின் முதலாவதுதக்பீர் வரை பிரயாணம் நீடித்திருத்தல்.

## 122. ஜம்உத் தஃகீரின் நிபந்தனைகள்

ஜம்உத் தஃகீர் என்னும் பிற்படுத்திச் சேர்ப்பதின் நிபந்தனைகள் பின்வருமாறு:-

(1) முந்திய தொழுகை நிறைவேற்றுவதற்குரிய நேரத்தில் குறைந்தது 1 ரக்அத்துத் தொழுவதற்குரிய நேரம் இருக்கும் போதே பிந்தின நேரத்துடன் சேர்த்துத் தொழுவேன் என நிய்யத்து வைத்தல். (2) பிந்தின இரண்டாவது தொழுகையை நிறைவேற்றி முடியும்வரை பிரயாணம் நீடித்திருத்தல்.

## 123. கஸ்று ஜம்உ தொழுகையின் நிய்யத்து

أُصَلِّي فَرْضَ الظُّهْرِ قَصْرًا عَلَى رَكْعَتَيْنِ
وَجَامِعًا مَعَ الْعَصْرِ تَأْخِيرًا أَدَاءً مُسْتَقْبِلًا
إِلَى الْكَعْبَةِ الشَّرِيفَةِ لِلّٰهِ تَعَالَى اللّٰهُ أَكْبَرُ

"உஸல்லீ பர்ளல் ளுஹ்றி கஸ்ரன் அலா ரக்அதைனி வஜம்அன் மஅல்அஸ்ரி தஃகிரன் அதாஅன் முஸ்தக்பிலன் இலல் கஃபதிஷ் ஷரீபதி லில்லாஹி தஆலா அல்லாஹு அக்பர்."

குறிப்பு:- முற்படுத்தித் தொழும்போது தஃகீரன் என்பதற்குப் பதிலாக 'தக்தீமன்' என்று சொல்லிக் கட்ட வேண்டும்.

FARWIN TRADERS.
116 1/0 PRINCE ST,
COLOMBO - 11.

பிரசுரிப்பவர் :

# O. M. பாஸி ஆலிம்

( ரிஜிஸ்டர் காபிரைட் உரிமை )

எங்களிடம் புனித குர்ஆன் சரீப்கள்,
மத்ரஸா கிதாபுகள்
மற்றும் மார்க்க சம்பந்தப்பட்ட கிதாபுகள்
புத்தகங்கள் யாவும்

மொத்தமாகவும், சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.

வியாபாரிகளுக்கு தகுந்த கழிவு தரப்படும்.
V. P P ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

கிடைக்குமிடங்கள்

**Parwin Traders,**
Book Sellers & Publishers,
No. 116-1/0, Prince Street,
COLOMBO - 11
Phone 22068

**பர்வின் டிரேடர்ஸ்**
பிரபல கிதாபு;புத்தக வியாபாரிகள்
116 1/0, குமார வீதி
புறக்கோட்டை
கொழும்பு - 11
தொலைபேசி 22068

**O. M. Fassy Alim,**
Division No. 4,
SAMMANTHURAI. (E. P.)

மௌலவி
**O. M. பாஸி ஆலிம்**
4-ம் குறிச்சி,
சம்மாந்துறை. (E. P.)